"வைத்திய அட்டவணை"

எம். வி. நடராஜ உடையார்,

சிங்கபுரம் போஸ்டு,

சேலம்

4.8.62.

288

ஸ்திதிமத் குருப் பிரமானந்த சுவாமினே நம

இராகம்—மோகனம்

பல்லவி.

ஞானநிஷ்டாள் மகிமையுரைக்க வென்னாலிடங்காது

அநுபல்லவி

ஆனாலுமவர் குணானு மறிந்ததை
அன்பாகச் சொல்கிறேன் மிகவும் -------- ஞான

சரணம்

ஆதியில்லாத சரீரத்தைக் கண்டு
அறிந்து—பிரமியார்கள்—பிரா
ரத்தக் கர்மத்தை கண்டு மனிதிலே
பார்த்து மகிழ்ந்துகொண்டு இதிலா
சக்தி வைத்தாலனர்த் தம் வருமென்று
அறிந்த மகாத்மாக்களா
பித்தரைப் போலே சகத்தி லிருந்தவர்கள்
பிரம விசாரஞ் செய்வார்—மிகவு—ஞான
தாமரையிலைநீரு போலே சுகமெல்லாம்
தான் . பார்த்திருப்பார்கள்
பூமியிலுள்ள புளியம் பழம் போலே
போகம் புசித்திருப்பார்
நாமகம் பிரமஉறஸ்மி நாமென்று
நன்றாயறிந்திருப்பார்.

பாமரானை நல்ல வார்த்தைகளைச் சொல்லி
பரிசுத்தராக்கி வைப்பார் மிகவும்—ஞான
தானாறு புருஷனை போலே சகமெல்லாந்
தான் பார்த்திருப்பார்கள்
வினைக்கன் றோ ஜீவனையிருந்தோ மென்று
மெத்த நகைத்திருப்பார்
வேணத் தக்க கர்மம் வேதங்கல் சொன்னாலும் .
மெய்யாக வுண்மை கொள்வார்
சேஷித்தலோ கங்களெல்லா நமதிட்
சித் விலாச மென்பாந் மிகவும்—ஞான
கந்தையும் பீதாம் பரமுஞ் சரியென்று
கண்டு மகிழ்ந்திருப்பார்
தந்தையுந் தாய்ப்போலே பக்ஷம் பிரறையுந்
சமமாகப் பார்த்திருப்பார்
சிந்தையிலே பிரமா அகமஸ்மி மென்று
தெளிந்து ஸ்துதி செய்வார்
நிந்தையில்லையர்வருக் கொரு வஸ்து
நிஸ்சலமாயிருப்பார் மிகவும்—ஞான
அந்தியில்லை சந்தியில்லை அவர்களுக்கு
அநுதினமு வெளிச்சம் .
சிந்தையில்லை தானமில்லை
சித்தென்னறிந்திருப்பார்
வந்தியா புத்திரனை சக மெல்லாம்
வான் மயமென்றிருப்பார்.
முந்திருந்தப் பழ யிருக்கோமென்று

முத்தியுமில்லை யென்பார்—மிகவுஞ்—ஞான
சித்தக்குண்டோயிந்த தேகாதி போகங்கள்
சற்றுந் தானில்லை யென்பார்
வந்தியாளைப் போலே சகத்திலிருந்தாலும்
வேதித்திருப்பார்கள்
கர்த்தாவாய் போகத்தா வாய்யுள்ள ஜனங்களை
கண்டு நகைத்திருப்பார்
பக்தா[illegible] கேளுங்க ஜீவன் முத்தாளுட
பாக்கிய மென்ன சொல்வேன் மிகவுஞ்—ஞான
அவர்களிருக்கு ஸ்தலங்களிலே யறுபத்தாறு
கோடி தீர்த்தம்
அவர்களிருக்கும் ஸ்தலங்களிலே காசி
யாதி கயிலாசம்
அவர்களிருக்கு ஸ்தலங்களிலே தில்லை
யம்பலமா ரூபம்
அவர்களிருக்கு ஸ்தலங்களுக் கொப்பாக
ஆராலே சொல்லக் கூடும் மிகவும்—ஞான
அவர்கள் திரத்தில் நெல்லி இலை கொண்ட அ
அன்னங்களிட்டாக் கால்
பலரோக மத்தன்பாரு பரா பரம்
பசூ நென்றே சொல்லிற்று
உப நிஷத்துக்களும் வேதங்கள் ஆலும்
வுரைக்கு மவர் மகிமை
ஜீவன் முக்தாளுட தீர்ந்த நிலை சொல்ல
ஆதி சேஷனாலுங் கூடாது மிகவும்—ஞான

<u>இராகம்:— பந்துவராளி</u>

<u>பல்லவி</u>

இந்த ரகசியஞ் சொன்னீரானால்
இருக்கிறேனே உனக்குச் சொந்தமாய்

அநுபல்லவி.

அம்மையில்லா தொரு சொல் செல்வி பிறந்ததும்
அப்பன் முலை குடித்து அபிவிருத்தியானதும்
ஆருக்குந் தோணமல் உருவமாய் சமைந்ததும்
அகோபலர் தயவினாலதர்க் குண்மை சொன்னதும்—இந்

சரணம்.

காரணமில்லாமல் பூதங்கள் பிறந்ததும்
கர்ப்ப கந்தலை கீழாயுர்ப்பன மானதும்
கற்பசு கன்றுக்கு யிரங்கி பாற் கொடுத்ததும்
கன்றைப் பிடித்துக் கரகத்திலிடைத்ததும்—இந்த 1

மலடி மகன் மனோராச்சிய மாண்டதும்
வானத்திலலர் கொய்து
மச்சுகள் முற் கொம்பாற்றச் சது சமைந்ததும்
மரித்தவன் படை வெட்டி செயித்த வன் மீண்டதும் — இந் 2
காலத்திற் பிறவாத காயத்து சமைத்ததும்
கண்டத்தில் ஜிக்வையில்லாதவன் புசித்ததும்
காலத்தன் கந்தர்வ நகரம் போயடுத்ததும்
கானற் சலத்தில் ஸ்நானம் பண்ணி பானஞ் செய்ததும்—இந் 3

பருதை பாம்பு ஸ்தானவு புருஷனைக் கடித்ததும்
பயந்தோடிக் கால் பேர்ந்து பல்லுகள் தகர்ந்ததும்
பாருக்குள் நபுஞ்சன் ஸ்திரி போகம் புசித்ததும்
பட்டணத் தலங்காரம் பொட்டையன் கண்டதும்-இந்த 4

இருசியை சத் புருஷன் போகம் புரிந்ததும்
இந்த வரகாயத்தை வோரம்பா லெய்ததும்
ஏழுலகு புழுதியை யிலக் கிட்டுக் குறித்ததும்
ஏழு கடல் சலத்தை யெறும் பொன்று குடித்ததும்-இந்த

இராகம்-தோடி

பல்லவி

வரவரப் பெருகுதே மலையம்
வந்து வந்துத் தருகு தே

<u>அநுபல்லவி.</u>

இரவும் பகலு மற்றயே காந்த வெளியிடலே
இருப்பது மின்பங் கொடுப்பதுந் துன்பம்
விடுப்பது மெங்கும் நடப்பது மில்லாமல்
எத்திசையும் முத்திசையும்-பத்தி செய்யும் புத்தியத்து
ஏக ரசானந்தமிர்த-போகமாய் நிறைந்த சுக-வர

சரணம்

நகைத்திடும் நினைவு போலாச்சுதே
நாமரூபங்கள் நினைவிறுற் கனவாச்சுதே
பகைத்திடு மனம் போச்சு தே
பஞ்ச தேகாசப்ரதிதி பாழாச்சு தே
திகைத்திடுந் தெய்வானந் தந்தி விலை போலாச்சுதே
திகழ்ந்ததுந் தெளி வடைந்ததுந்
திகழ் படர்ந்துந் தேக மரந்ததுந் தெரியலாச்சுதே
திகழ்ந்ததுந் தெளிவடைந்ததுந்
திகழ் படர்ந்துந் தேக மரந்ததுந் தெரியலாச்சுதே
திரமாகி வுரமாகி வரமாகிப் பரமாரி
தீதிலா வென் குணத்தால் காதலாய்க் கலந்தெழுந்து
மேதினி யெல்லா நிறைந்து சோதியாய் தழைத்த சுகம் -வர
தோன்றிடு மறிவுதானுகி-தொம்பதலக்ஷிய
சொரூபமே தானுகி
பூண்டிடும் பொருள் தானுகி-புறம்பு வுள்ளும்
பொன் மணியாகி
ஆண்டிடு மசி பதத்துக் கப்பாலே வொப்பில்லாமல்
ஆரியே அகந்தெரியே
அதுமாறியே யமர்ந்தேறியே -அழிவிலாத
அப்பதத்திலட் பதித்து சிற்பதமாயற் புதமாய்
அடியுமுடியு மற்று நடுவி வடிவு மற்று
ஸ்படிகத்தி கழுது போற்றடையற் றனந்த சுகம்-வர
இருளான மாயைக் கப்பா-லீசனுக்கிப்பால்
எழுந்திடும் விருத்திக் கப்பால்
பொருளான போதத்துக்கப்பால்-பூரணத்துக்கிப்பால்
புகழ் பெறும் புத்திக்கப்பால்
குருப் பிரமானந்தன் கூறிடு வழி மொழியார்க்
குரைந்திட கோலமறைந்திட

போதம் நிறைந்திட ஞானம் பொருந்திட
குற்றமற்ற சுத்த புத்த நித்திய முத்த சத்திய ஞானங்
குருவுமகுரும் போல வருண் ஒளியும் போல
பரவி யிரண்டற் றொன்றாய் நிருபமானந்த சுகம்-வரவர

இராகம்-தோடி

பல்லவி

புத்தி கெட்டு யேன் மலேக்குராய்-அடே ஜீவா
போதத்தை யறிந்து கொள்ளடா

அநுபல்லவவி.

புத்தி கெட்டு அலேயாதே போதத்தை நீ யறிந்து கொள்
எத்தை நம்பியிருக்கிறாத்தை யேக்குச் சொல்லடா-புத்

சரணம்

1. சகமுஞ் சரீரமும் அடே ஜீவா
   ஸ்திரமென்று யெண்ணதே
   சிவோக மென்று சொல்லியிருந்தையே யானல்
   சித்தலய மாகி விடலாம்
   லோகம் பாவனேகள் பண்ணி
   சொரூப நிலேயறிந்து
   யேக வெளியாய் நின்று
   யெங்கும் நிறைந்துக் கோடா புத்தி

2. காமாதி சத்துருவை அடே ஜீவா
   கண்டங் கண்டமாக வெட்டடா
   நாமரூபமான வுலகத்தை
   நாமென்றறிந்துக் கோடா
   சாதன துஷ்டயத்தால்
   சமுசயங்கள் போக்கி வைத்த
   ஆதியந்த மற்ற வஸ்து
   யானென்றறிந்துக் கோடா புத்தி

3. அதுவோ யிதுவோ வென்று-அடே ஜீவா
   அலேந்து நசாகாதே
   னறிவி வடிவாகி யிருந்தாயானல்
   அக கோபம் போகுமடா
   ஆதி பிரமானந்தர் பாத
   மநுதினமும் பணிந்தால்
   சோதி மயமாய் நின்று
   சொரூபமாகி விடலாம் புத்தி

இராகம் பூரணச் சந்திரிகை

பல்லவி

கற்பிதம மரு பூமியில் கானர்ச் சலந் தோனறும்
அப்படி யாவிப் பிரபஞ்ச மறிவினிடத்தில் தோனறும்

அநுபல்லவி.

சொர்ப்பனத்தில் கண்ட வஸ்து
செப்புக்குள்ளே வைப்பாருண்டோ
சோதியடா நீதியடா
வாதியடா வஸ்து நித்தியம் கற்

சரணம்

1. மலடி மகனை கண கண்டதுண்டோ வுலகில்
   மகதாதிப் பிரபஞ்

நிலவரங்களிறியாமல் நிர்க்கு மந்தவிஷயம்
நிச்சய மென்றென்னுவர் களிசர்க்குளப் பழக்கம்
நலமானரச் சுவிலே நல்ல சர்ப்பங் கண்டதுண்டோ
நாமமில்லை ரூபமில்லை நானுமில்லை வெரும் பொய்யடா—கற்

2. சுத்தியிலே இவ்ள்ளியுண்டோ சூட்சமறி மனமே
ஸ்தூல மரக்கட்டையிலே சோரனுண்டோ பார்த்தால்
முத்தி வழி தெரியாமல் முழித்தானவன் குருட ன்
மோகமடர் வேறே யில்லை போதியடா யறி வை
பத்தி வைராக்கியத்தால் பார்த்துணர்ந்த ஞானிகட்கு
பங்கமில்லை பாசமில்லை தங்குமடா தன்னறிவு—கற்

3. ஆதிகுரு பிரமானந்த ரடி பணிந்து போற்று
அறிவான கண்ட வந்து அநுபவமாயுரைக்குஞ்
சோதிர் மயமான குரு சொன்னபடி பலிக்கு ம்
அத்வய்தமடா வேறிரயில்லை சுத்தறிவு விளங்கும்
போத மயமானவர்க்கு புவி விஷயம் பொய்யாகும்
புத்தியில்லை மனமுமில்லை பிறப் பிறப்பு தானுமில்லை—கற்

இராகம்—நாத நாமக் கிரியை

பல்லவி

பிரமை வாகம் சிவகுரு கிருமையால் பிரமை வாகஞ் சிவா

அநுபல்லவி.

பிரமை வாகம் சிவகுரு கிருபையால்
சின்மய போதானந்த கனம் தத்—பிரமை

சரணம்

1. காரண காரண் மேக மனே க ம்
கால கால கவிதோஷ விஹீன ம் பிர
2. கர்மா கர்ம விகர்ப்ப விதார ம்
நிர்மலசம் வித கண்டம பார ம் பிர
3. ஆசா பாசவி நாசன சதுர ங்
சேச பஞ்சகா தீதம தீ த ம் பிர
4. அப்ரமே யப்பதமகி வாதார ம்
சொப்ர காசமன பாயம பாய ம் பிர
5. நாத பிந்துக்களா தீதச மீத ம்
வேத சாஸ்திர வித்தியாதீ தம் பிர

இராகம்: மோகனம்

பல்லவி

பிரமையை தூர விட்டு விட்டா
பிரமஸ்வ ரூபமாக நீ யிருடா

அநுபல்லவி

சுமையை சுமந்துகொண்டு—ஏண்டா யேண்டா
யேண்டா அலைந்து சாகுரா ய் — பிர

சரணம்

1. அவித்தை யென்னும் பெண்ணை வெட்டா யே
ஆத்மஸ்வ ரூமறியாமல் கெட்டா யே
ஜகத்தில் கன்ம விரை நட்டா யே
வெறுவான சாஸ்திரங்களை கேட்டா யே
மகத்துக்கள் சரணத்தை துதித்துந் ததித்து நித்தியம்
பனியாய் பனியாய் பனியாய் சொன்னேன் சொன்னேன் —பிர

2. சீவத்வ முனக்குத் தானே தடா — சுத்த
சைதன்ய வஸ்து நீ தானடா — உன்
மைத்தை முதலாகத் தள்ளடா — நல்ல
புத்தியை பரிபாலித் தாளடா — பர
மாத்மா வென்பதும் பொய்யேடா -பத்த
தாமா விசாரித்துப் பாரடா
அணு மாத்திர மாகிலும் உன்னைத் தவிர வேறு
காணேன் காணேன் காணேனுகையிலே -பிர

3. இதை சொன்னேன் காதிலே பட்டுதோ — நல்ல
வெளிதான வழியிலே விட்டுதோ — அகப்
பிரமை யென்பதும் விட்டுதோ — வர்ரு
சர்ம தர்மங்கள் விட்டுதோ
சுகரூபி குரு தேசிகன் கிருபையாலே
ஆனேன்னே நானே நகையிலே -பிர

இராகம்: காம்போதி

பல்லவி

பேச வென்றால் பேரின்ப்ந்தனில் பேசும்
பிரவிக் கடலைக் கூடி பேசாதே

அநுபல்லவி

காசி பணத்தாசை கருத்துடனே வாடி
சுதராதே கூட வீதி நாய் போலெங்கும் வோடியே

சரணம்

1. இஷ்டமில்லாத பேச்சு யெவர்க்கு மின்பமாமோ
எரிகன விற்கரும்பு யெடுத்தால் யிறையாமோ
நஷ்ட புத்திக்கு ஞான மகிமை யுரைக்கப் போமோ
நாய்க்கு முழுத் தேங்காய் நல்ல ருசியாமோ — போ

2. குயிலைக் கிளியாய் கற்க குரலது கூடாதே
ஒரு வழி மொழியில்லாது தர்க்கரை நாடாதே
அகிலவு பாதியர்க்கு அதிக யுக்தி பாடாதே
அரும் பசி யில்லாதார்க்கு அன்னம் ருசி கூடாதே-பேச

3. விர் மறவிதியை விட்டு நீ பேசாதே
வீண் நறைகள் கேட்டு வீணிலலையா தே
அளிச் சொறிந்தாலும் பொன்ன டைக்கும் விட்டுறையாதே
வாடும் பயிர் முகத்தில் மாரி போலாகுஞ் சாட்சி
மறவாதே மன ஞானிந் திரியங்கள் ஆட்சி ஆகுஞ் சாக்கிர
அருள் பிரமானந்தன் ஏகக்காலன் பாகச் சொன்னேன் விஷி -பே

இராகம்-பியாக்கடை

பல்லவி

எந்த வேளையும் பிரமசிந்தனையுட
னிருப்பாய் நீ மனதே

அநுபல்லவி.

அந்தி பகலில்லாத வானந்த வெளியான
அம்பரத்திலிருந்திராய் தும்பி போல் பறந்திடாமல் -எந்

சரணம்

1. காலம் வயது மாய்க் கோலங் கொண்ட ஸ்தூலங்
கானற் சலம் போலாமே — கருத்திலும்
மாலை மயக்கத்தில் வந்தரச்சு சர்ப்பம் போலவும்
வாக்கு முதல் எட்சமமாமே — மாரிட

மூல மயக்கமாகு முக்குணமே மாயை தன்னில்
மூளைத்த காரணமாமே முடிவில்லா
ஞால மஉறா காரணத்வம் பதவடிசி யார்த்தமாய்
நலங்குஞ் சரீரமாமே இந்திர
சால முலக வாழ்வை சத மென்று கொண்டிடாதே
சரிதை கிரியை யோக ஞானங் கடந்தப்பாலே
சிலங் குறும் வெகு மனமதில் சிந்தை வைடதரு
சிக்கமாய் சேவித்து உட் கவலையுத் தெருந்த—எந்த
எனது வுனது என்ற யில்லாத பிரமை கொண்டு
யேங்கி யிளைத்திடாதே எவ்வுயிருக்குங்
கனவினிற் கண்ட பொருள்கிளை வினிற் கலந்தாவங்
காரியங் கண்டிடாதே கருத்தென்னும்
ககனி* மனதினி லெண்ணி யுந்தன் மண் முதலைந்த பதத்தால்
மயங்கித் தியங்கிடாதே மாரி
சிறுமுருங் சிந்தையிலல் சிஷ்டர்ற யிழர்தலகில்
சிக்கி நீதியங்கிடாதே சிதானந்த
தனது அகண்ட ரச சொர்ணை தனில் மூழ்கியெ
தலைவன் முதல்வனொடு நீல மேருங் கடந்தாப்பால்
புனலீங் குளிர்மை பொல பூரண பொத்ந் தன்னில்
புத்தி வைத்த நித்திய சாத்த புத்தமுக்தாகி யெரி—எந்த

3: அடிக்கடி நினைந்திடா படி படிகம் போலே
மனதாகியே அக மறந்த அறிவிலா
கடத்தட புறம் புற புங்க கனம் போலே சிகரம்
கெவலமாய் நிறைந்து கர்வம்
ஒடிக்கி யடக்கமா யுட் பறம் பிறண்டத்த
வொங்கிவட வொடி கழைக்து வொருகாலும்
இருக்க மொடுக்க மில்லாயெ காந்த வெளியாகி
எங்கு மிலக்க மற்ட்நு
த்டிக்த் மடிங்கிடா தெறலங்கு மான ஊயில்
துயில் பிறமானந்தன்று ஊ யாமீண மாந்த
கடுத்த முகங் கொண்ரதெ காகூரி மெய் பொருளர்கி
கை கடங்கா மெய் கடங்காமற் கடப் பொய் மறைத்த எந்த

இராகம்:— சௌராஷ்டிகம்

பல்லவி

மனமே மயக்கந் தெளியாயோ அப்ரச்மான
மனமே மயக்கந் தெளியாயோ

அநுபல்லவி

தனதாய் சொல்லுகிறேன் தாரணி
பொய்களும் மறியாவதன் — மன

சரணம்

1. முந்நாளில் செய்த வினையல்லோ முழுது
புன்னை தேகமானதல்லோ உட்பகுந்து பார்த்தால்
மன்னுதியை ஈந்த தானி தல்லேர் மரண கால
சந்நியாசி பயணத்திலோ ஆகையினால்
என்னுன உண்மையல்லோ (மன)

2. ஏருபம்தான் மாதிரியில் பிறந்த பெஞ்ச வரமுகை
வரிசை வளக்கங்கள் தெறிந்தவான யொவ முன் னை
கெறிசி காமாயமல் மறந்த தின மிறந்து
கரிசினங் காயகுலிருந்து தினம் தினமும்
3. கண்ட விடங்களிலெல்லாம் சுத்தி காயத்தோர் சுகம்
முன்டொனைக் கேளிந்த புத்தி வோயாதோ
சண்டாள சடலத்தைப் பற்றி சாவும் பிறப்பும்
முண்டாயிருக்கு மந்தி.

1.8.62

பீனிச_ரோகம்.

நாசி வாளும் சிறுய் விழுகும் ரத்தஞ் சதை போல் மூக்கடைக்கும் பேசும் நயன மிக்க கடுக்கும், பெருக இருமலுண்டாகும்.

பாசிப் போல பிசைந்து உடம்பு வனமிகும் பீனிசமே

கூடம்	தோலா	10
பெப்பர்மின்ட்	"	10
அஜ்வான் எஸன்ஸ்	"	71/5
கார்பாலிக் ஆஸிட்		4 4/5

மூக்கு_நீர்_பாய்ச்சல்_

கண்டமும் மூக்குத் தண்டில் கரகரத் தூறும் போது
தண்டமும் தெனஷம் பற்றி தும்மியே தண்ணீர் வீழ்ந்து
மண்டையும் கனத்து நொந்த வாதமும் பகைக்கு மாகில் முண்டகம்
மதிக்குமடா மூக்கு நீர் பாய்ச்சலாமே

இதற்கு நாயுருவி, சுட்ட சாம்பல், நவாச்சாரம் சுண்ணம்பு மூன்றும் கூட்டி கலந்த நாசியில் பிடிக்கவும். 2 மிளகு, கருங்குங்கிலியம், மஞ்சள், பொடி மூன்றையும் பொடித்துத் துணியில் பரத்தி-திரித்த புகை பிடிக்கவும். தைலம்: ஆதண்டப்பட்டை பலம் 1, மிளகு பலம் 1, அரைத்து ஒரு படி நெல்லெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி மூக்கில் விட்டு தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

காசத்துக்கு.

இண்டம் பால், திரிகடுகு, கற்கடக சிங்கி, பொரித்த வெங்காரம் இதுகளை நாள் பண்ணி மேல்-படி பாலில் கொடுக்க.

சுக்கு, மிளகு, திப்பிலியும். சிக்க சீந்தி தூதுவளைமிக்க சமமாய் வெங்காரம் தக்க நறு நெய் தேன் தனில் நக்கக். காசம் மேகிடுமே.

பக்க_மந்தார_காசத்தின்_குணம்.

இக்கணந் தன்னுடொக்க இருமலும் இளைப்பு முண்டாய்
சிக்கென நெஞ்சைக் கட்டி சீறும் மிகுதி திப்பி மிக்க தோர்
வயறு தாளும் மிகுந்த தான் பொருமும் மாகில் பக்கமந்தாரந்
தன்னில் பற்றிய காசமாமே.

சுக்கு, இஞ்சி, மிளகுடனே, தய்யங் கண்டங் கத்திரி வேர் மிக்க கஷாயம் வைத்தெடுத்த மிகுந்த தேனும் திப்பிலியும் ஒக்கக் கூட்டி தானுண்ண உண்டாந்த இருமல்

இருமல் ஈளையுடன். (Incomplete)

ரத்த காசத்திற்கு.

முசுமுசுக்கை ரசம், சம்பள ரசம், பசுவின் பால், நெய் சரி கூட்டி ஜாதிக்காய் சாதி பத்திரி லவுங்கம் பொடித்துப் போட்டு அனலில் வைத்து கிளறி தின்னவும்.

சீழ் காசத்திற்கு.

அந்தரத் தாமரை திரிகடுகு கூட்டி குளிகை பண்ணவும்.

குடல் வாத குணம்.

குடலை வலிக்கும் காலுழையும் சுழிமிறி இறையும் மந்திக்கும்
உடலிலடங்கி ஓடி நிற்கும் ஒரு கால் விடாமல் புரண்டி நிற்கும்
கடலில் தரங்க மது போல காறிக்கும் மிரி வாதை செய்யும்
தெடலில் பெருத்த வாரலை போல் சிதைக்கும் குடலின் வாமிதே.

கழல் மணி, வெள்ளை யுள்ளி முருங்கை தோல் வசம்பு தேரும் அளவுடன் சுக்
கோடோமம் அடுப்பிலே வேகவைத்து - - - - - - - (line omitted)
கொழ்குமிர் கொடலின் வாதம் கூப்பிடா தோடுந் தானே.

அக்கினி மந்த குணம்.

மந்த மிகுந்து பசி யெழும்பும் வயிறு அழித் மந்திக்கும்
சிந்தை தனில் நினைந்த தெல்லாம் சொல்லும் கொள்ளா வொட்டாது இந்த குணமே
இந்த குணமே இருந்தால் இதுவே அக்கினி மந்தமென்றே அந்தப்படியே
முன்னோர்கள் அருளிச் செய்த அடவிதுவே.

இதற்கு மருந்து :- கருவேப்பிலை 1, திப்பிலி 1, சுக்கு 2½, இந்துப்பு 3 கூட்டி சூரணம் பண்ணி நெய்யில் கொழப்பி தின்னவும். தீரும்.

மந்தாக்கினி வாயுவின் குணம்.

நீண்டு பசி மிகுந்து நின்று வயிறு ளையும்
வேண்டினது தின்ன விரும்பமே மீண்டுமது
சந்தோஷமாக தாளாது வாந்தி செய்யும்
மந்தாக்கினி யென்னும் வாயு.

இதற்கு மருந்து :- வேளாம் வேர் பட்டையும், மணலுங் கூட்டி கருகாமல் வறுத்து தூள் பண்ணி சுக்கு, மிளகு, கடுக்காய் தூள், அதிவிடையம், அரத்தை, இந்துப்பு, ஓமம், வசம்பு கடல் பருப்பு, கருஞ் சீரகம், கடுகு ரோகிணி, வாழப் பருப்பு சமனிடை எடுத்து சூரணித்து நொச்சிச் சாற் மொடக்கத்தான் சாற்றில் அரைத்து குளிகை பண்ணி தேக மறிந்து கொடுக்கவே பேதியாகி நோய் தீரும். புளி விடவும்.

குண்டல வாயுவின் குணம்.

கண்டிக்கு முதரந் தன்னில் கதித்திடும் கூப்பிட்டோடும்
எண்டிசை விரும்பி தின்னில் ஏப்பிடும் உருண்டு கல் போல்
தெண்டித்து செதறி பின்னும் செனத்துடன் பறந்தடங்கும்
தொண்டிட கொடலில் குன்ம குண்டல வாயுவாமே.

இதற்கு மருந்து :- முத்தின பிரண்டை, கருங் கொள்ளி, கல்லுப்பு சரி கூட்டி வேக வைத்து திரிகடுகு தேசவரம் ஓமம் உள்ளி கூட்டி சூரணித்து தேனில் கொள்ளவும்.

தெவ்ளை விப்புருதி குணம்.

இடுப்புடன் முள்ளந் தண்டு மிறுபறம் விலாக்கள் நெஞ்சு
நடுக்கியே குளிர் வெதுப்பு நையவே கொதித்துக்கு குத்தும்
மடித்திடும் உதர நோவும் மயக்கமோடி இருமல் சீழும் குடி கொள்
இருந்த தென்னும் கொவளை விப்புருதியின் குணமாமே.

இதற்கு மருந்து:- தேத்தாங் கொட்டை, சுருளி, சீரகம், வகைக்கு எலுமிச்சங் காயளவு சூரணித்து கதலிப் பழம் மூன்றில் மத்தித்து ஏழு நாள் கொடுக்க உப்புப் புளி நீக்கவும்.

ரத்த காச சீ காஷும்

இருமலும் சயமு ரத்தம் கூட இடை விடா சுரமும் தோன்றி
அரிவியே மெய்தருங் கண்டிப்பாகவே வாந்தியாகி
மருவிய அசனம் தானும் மருத்துலர்ந் தாகம் வற்றி
கருதியே குறைந்து வாடும் காச நோய் என்னலாமே.

இந்த நோய் நின்ற நாளில் இருமலும் சீழும் உண்டாய்
முந்தவே ஐயம் பித்தம் மூடிட குளிர் வெதுப்பு
வந்ததோர் குணங்கள் கண்டால் மயங்கிடாதே என் நாளும்
பைந்தொடி ஆவின் பாலும் கீரையும் பருகலாமே.

இதற்கு மருந்து:- வெட்டுவாய் தழைத்தான் பிடி 1, ஊமம் பட்டை தூள் பிடி 1, நாற்பது பலகரை 20 எலுமிச்சம் பழ ரசத்தில் ஒரு நாள் ஊர விட்டு கலக்கி இருத்து ஒரு படி நல்லெண்ணெயில் கூட்டி கொதிக்க வைத்து முன் தூளையும் போட்டுக் கலக்கி சீனி சர்க்கரை ஒரு பிடி போட்டு கலக்கி நித்தம் ஒரு கரண்டி கொடுக்கவும்.

குன்ம காசக் ~~குணம்.~~

இருமலும் இளைப்பு முண்டாய் ஈளையும் மிகுந்து வாங்கி
மருவிய வயிறு தானும் மந்தமே பற்றி நிர்க்கில்
உரு வழிந்து உடலு வற்றி உருதியும் கெடு மெய்யாகில்
அருவியே இருமல் குன்ம காச மென்றறியலாமே.

இதற்கு மருந்து:- கற்கடக சிங்கி, திப்பிலி, அரத்தை, வெங்காரம், சரி கூட்டி வெருக்கடி தேனில் கொள்ளவும்.

ஊளமாந்தை.

நெஞ்சுடன் பழுவும் பக்கம் நினைவழிந்திரிமி நொந்து
பஞ்சு போல் சுருமுந் தோன்றி பசுமையாய் பசியுங் கட்டி
அஞ்சவே ஐயம் பித்தம் அசனமு மொருத்து வந்தால்
ஒஞ்சிடாதுன்மை தானே ஊளமாந்தை யென்னலாமே.

இதற்கு மருந்து:- ஆடா தோடை, குப்ப மேனி, பருத்தி, கையாந்த கரை, சாரணை பெராத்தழை வகைக்கு சார் படி ½, வசம்பு வி. 1, தூள் பண்ணி பசு நெய்யில் முன் ரசங்களையும் விட்டு எரித்து உள்ளுக்கு கொடுக்கவும்.

கந்தக நெய்.

பசு நெய் படி 1, எருக்கம் பால் உழக்கு, நெல்லிக்காய் விராகனிடை 6, சொரக்காய், கொடிந்தி வி. 2, இந்துப்பு விராகனிடை 6, ஜாதிக்காய் வி. 1, தான்றிக்காய் வி. 1, அரிதாரம் வி. 1, பாசாணம் பணம் ~~விராகனி~~டை 1, நெய்யில் பொடி பண்ணி போட்டு காய்ச்சி அநுபானம் அறிந்து கொடுக்க சயம், இருமல், ஊளமாந்தை மேகங்கள் தீரும்.

காசம் குளிகை.

ஜாதிலிங்கம், தாளகம், மனோசிலை, வெங்காரம், திரிகடுகு வகைக்கு விராகனிடை 1, நாவி விராகனிடை ½, இதுகளை சுத்தி செய்து பொடிப் பண்ணி கல்வத்திலிட்டு இஞ்சி சாற்றில் மூன்று நாள் மூன்று ஜாமம் அரைத்து குப்ப மேனிச் சாற்றில் மூன்று நாள் மூன்று ஜாமம் அரைத்து தூதுளங்காய் அளவு குளிகை செய்து உலர்த்தி நெய் தேனிலிட எந்த காசமும் தீரும்.

புளி நீக்கவும். கண்டங் கத்திரிக் காய், சூ தளங்காய் பருப்பு கூட்டவும்.

காசத்துக்கு சூர்ணம்.

கண்டங் கத்திரி விரை, தூதுவளை விரை, மெழுகு சிரகாஞ்சொரி ~~வேரி~~. சிறு குறிஞ்சானுள்ளி பெரமி பருப்பாகை, அப்பை வகைக்கு பலம் 1, சிறுதேக்கு பலம் ½, சுக்கு திப்பிலி, கோஷ்டம், திப்பிலி மூலம், சடர்மாஞ்சில், ~~காக்கிடங்கு~~ சிங்கி, அரத்தை, சன்ன லவங்கப் பட்டை, லவங்கம், அபினி, வகைக்கு பலம் .வ, இவைகளை சூரணித்து காலை மாலையில் நெய்யிலும் மாலையில் பால் தேனிலும் சாப்பிட காசம், ஈளை, இருமல் சமரோகம் தீரும்.

மூலவாய்வு, பவுவரை ~~லக்ஷணம்~~.

உந்தியின் கீழ் வயித்தில் ஓலை மூடி போலே தோன்றும்
சந்துகள் அயர்ந்து நோகும் தன்னுடல் நடுக்கும் வேர்க்கும்
மந்தமாய் உடலும் வற்ற மயங்கியே சத்தி தோன்றும்
முந்த இக்குணத்திலை மூலமாம் வாய்வு ஆமே.

இதற்கு மருந்து:- முள்ளங்கி சாறு படி 1, ஏலம் பலம் 1, சீரகம், பலம்1, இவைகளை பொடி பண்ணி பசு நெய் படி 1, முள்ளங்கி சாற்றில் கலந்து பொடியும் கலந்து வெய்யிலில் வைத்துக் கொண்டு கரண்டி வீதம் சாப்பிடவும்.

வேறு மருந்து.

அபின், சாதிக்காய், சாதிப்த்திரி, மஞ்திலம் வகைக்கு பலம் 1, மெழுகு பலம் 4 வறுத்து பீமரத்துப் பட்டை சாற்றில் ஒரு கடி கொடுக்கவும். மூல வாய்வு தீரும்.

பவுவரையின் குணம்.

ஊத்து போல் வாயு ஊறும். உளையும். நெஞ்சு குமட்டும். காத்து பரியும். கண்ணிரும் காலும் கையும் அயர்ந்து வரும்.

பார்த்து தெளிந்து முன்னேரும் பவுவரை என்று சொல்லுவாரே.

பஞ்சு போல மேல் தெரியும் பகரும் மெறவும் காயமுண்டாம்
கொஞ்சமாக இருமலுண்டாம் குதமும் பிருகும், மலம் சிருக்கும்
நெஞ்சை எரித்து சத்தி உண்டாம், நேர்ந்தே உடலம் மிக வற்றும்
மிஞ்சு நோவு பவு வரையாம் மிகவும் முன்னால் விழம்பியதே.

இதற்கு மருந்து.

பவுப்பாகல், காட்டாமணக்கு, ஆகாசக் கெருடன், சாறணை, சத்தி சாரணை கோவை, அப்புக் கோவை, நறளை, புளி நறளை, ஊஞ்சல் பட்டை, வேப்பம் பட்டை நெல்லிப் பட்டை, ~~மெழு~~கறணைப் பட்டை, சிறுகுறுஞ்சான், பேய்குமட்டி வேர், சீதாய் வேர், திகிடுகு, வெள்ளுள்ளி, சீரகம், ஓமம், வசம்பு, ஈருள்ளி, வகைக்கு வறுத்து ஊத்தின விளக்கெண்ணெயில் முந்தின சரக்குகள் தூள் பண்ணி எண்ணெயில் கலக்கி வேக வைத்து தட்டு எடைகொடுக்க பவுவரை விப்புருதி தீரும்.

கூடை வியாதி ~~குணம்~~.

தெக்கு வாருப்புழுமலமிருக்கும் நெற்றிக் கபால வலியண்டாம்
பஞ்சு, விதூலை, மிஷல், சோபம், கபசிரா, அன்னம் செரியாது
கொஞ்சம் இருமல் உண்டாம் கூடை எனவே குறிப்பாயே.

இதற்கு மருந்து.

திசை நெல்லிப் பட்டை, மிளகரணை, சிறுகுறுஞ்சான் முன்றுங் கூட்டி ஊஞ்சப் பட்டை சாறு விட்டு அரைத்து சுண்டக்காய் அளவு உண்டை பண்ணி வறுத்து ஊற்றின விளக்கெண்ணெயில் உள்ளி வசம்பு ஈருள்ளி, கூட்டி எரித்து இந்த எண்ணெ காலையில் தட்டு எடை

சாப்பிடவும். மாலையில் முன் குளிகை சாப்பிடவும். கூட வியாதியும், பருவரையும் தீரும்.

வயிற்று விப்புருதி குணம்.

பொருமும் மலத்தை தான் மரிக்கும் போத மிகவும் வலியுண்டாம்
குருதி கசியம் ஓடல் நடுக்கம் கொள்ளும் கர்ப்பம் தனை அளிக்கும்
வருடி இடுப்பு வயிறு குழையும், மலத்தை மிக்வும்
விரிவிருக்கும் பெருக பிணிக்கு ஒரு மாதம் பேசு கெற்ப விப்புருதியதே.

இதற்கு மருந்து:- புளியம் பிரண்டை அப்பனக் கிழங்கு, கருனை கிழங்கு, முருகம் கிழங்கு பெருண்டை கிழங்கு, முள்ளி வேர், ஆதண்டை வேர், சிற்றாமுட்டி வேர், கொடிவேலி, முசுமுசுக்கை ஊஞ்சல் பட்டை பொச்சம் பட்டை ஆயில மட்டை, சரி கூட்டி இடித்து விளக் கெண்ணெயில் வடித்துக் காய்ச்சி* காசிடை கொள்ள.

புன்னைக்கு பிரண்டை புளியம் பிரன்டை, அப்பன மூன்றையும் நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொடுக்கவும்.

சுவாச காசத்தின் குணம்.

தலையை நொந்து வீடாயுண்டாம் தன்னுல் வாந்தி ஒப்சிமும் ஒலையும்
ஒலயம் ஓடம்பல் சொற மிருமல் உடல் நடுங்கும் தடியடி போல்
பெலமும் கெட்டு மேல்மூச்சாம் பிணியால் நீர் தான் சிக்கி வீடும்
தொலயும் அன்னம் அசீரணமாம் சுவாக காச மிது தானே.

இதற்கு மருந்து:- பஞ்ச லவணம், ஏலம், லவங்கம், தக்கோலம், செவியம், திப்பிலி தும்மட்டகம், கறிவேப்பிலை, மஞ்சள், சந்தனம், கர்ப்பூரம், சங்குவேர், தாதவளை, சிறுநாகப்பு, அதிமதுரம், அபின் சரி கூட்டி இதற்கு சரி சித்திர மூலி வேர்பட்டை கூட்டி சூரணித்து சமன் சர்க்கரை சேர்த்து வெருக்கடி வென்னீரில் கொள்ளவும். சுவாச காசம் மிண்டு பித்த குன்மம் திரிதோஷம், சோர்வும் தீரும்.

பித்த வாய்வு குணம்.

ஓடி ஒடிந்தே மயங்கி வரும் ஒரு கால் விடாமல் மெய் குத்தும்
வாடிக் காயம் வறண்டு வரும் வலுவாய் பதரும் உள்ளாக
தேரும் புணர்ச்சி தனை செய்யா சிறு நீர் அருகி தெளிந்து விடும்
நாடும் கபாலம் களைப்பு வலி நயந்தே நாடும் நல்குவதே.

இதற்கு மருந்து:- சீந்தி ரசம், நெல்லிக்காய் ரசம், கத்தாளை ரசம், கய்யாந்த கரை ரசம், அதிமதுரம், பசுவின் பாலில் கூட்டி அரைத்து பசுவின் பாலுடன் சங்கும் படி ½ அரையே அரைக்கால் படி நல்லெண்ணெய் கூட்டி கலக்கி காய்ச்சி உள்ளுக்கு கொடுத்து தலைக்கு தேய்க்கச் சகல பித்தமும் தீரும்.

மகோதரத்தின் குணம்.

அங்கமும் அடைக்க வீங்கி அற மெரிந்தாமே விம்மி
வங்கயாம் வாதம் தன்னில் வாயுவும் ஜலமும் கோர்த்து
கன்னுலில் நோயுமாகி கடியதோர் வாந்தி பண்ணும்
மங்குலின் குழலிலே மகோதரன் என்னலர்மே.

இதற்கு மருந்து:- குக்குளம், சத்குப்ப, கடுகுரோகணி, கூகை நீர், இந்துப்பு, அரத்தை திரிகடுகு, கெந்தி ரசம் இவைகளை சூரணித்து தேனில் கொள்ள கர்ப்பான், விஷவாதம், மகோதரமும் தீரும்.

6.8.62.

வாய்வு கிராணி~~யின் குணம்~~.

பொருமி எரிந்து நெஞ்செரித்து புளித்த ஏப்பமுண்டாகும்
கருகி கழிந்து கண் தங்கும் காந்தும் தொப்புள் தனிலடங்கும்
வெருவீ தேடா தன்னத்தை மிகவே வாய்வு கழிந்திருக்கும்
ஒரு வீ பிரிதல் போ மேனி ஒலந்தும் கிராணியுமே.

<u>இதற்கு மருந்து</u>:- ஓமம், சுக்கு, வெள்வெங்காயம், பலம் 2, மெழுகு பலம் 1, திப்பிலி பலம் ½, பெருங்காயம் விராகனிடை 2, இவைகளை சூரணித்து தேனில் கிளறி முள்ளிக் காய் அளவு சாப்பிட தீரும்.

பெரிய வாய்வு குணம்.

ஒத்து வெதும்பும் பல் கிட்டும் ஒறக்து குத்தும் தாக்கிடும்
சித்த மிகுந்து கஞ்சி தண்ணீர் தேடும் கொள்ள ஒயாது
பத்தும் மனிதர் இருக்கபாலும் பரியும் வாய்வு கீழ்நோக்கி
பித்தும் பக்கம் தளை குத்தும் பெரிய வாயு இதுவாமே.

இதற்கு மருந்து:- சீரிய இருவரும் செறந்த வேரும் சூரிய ஒருவனும் கொடிய காயனும் ஆரிய வடகிரி அமர்ந்த மோகனும் நேரிய எண்மரும் நெருப்பை ஒக்குமே பேரினில் பெரியதோர் வாயுவு போகுமே.

இரு சீரகம், திரிகடுகு, இந்துப்பு, பெருங்காயம், ஓமம், இவை சமன் கூட்டி குப்பமேனி ரசத்தில் வறுத்து சூரணித்து வென்னீரில் கொள்ள பெரிய வாய்வு தீரும்.

சங்க கிராணி~~யின் குணம்~~.

வாயவுதான் வந்து நெஞ்சில் வயருப்பி பொருமு மார்கில்
சாலவே கொட்டல் புரட்டி சற்றுள்ளே எரிச்சலாகும்
காருடன் உடம்பயர்ந்து காற்றுடன் களிச்சலுண்டாம்
சாதமும் செரியா தென்றுல் சங்கத்தின் கிராணியாமே.

<u>இதற்கு மருந்து</u>:- பெருகுரிஞ்சான், வடக்கே போன வேரை வெட்டி வந்து சூரணித்து உழக்கு 1 வெள்ளுள்ளி உழக்கு 1 சுக்கு, மிளகு சூரணித்து சிற்றாமணக்கெண்ணெயில் கிளறி தின்னவும்.

பெரு வயிறு ~~குணம்~~.

கரிவியும் மந்தம் வற்றி காயமெல் உடம்பும் வற்றிட பெருகிய
உதரம் தானும் பெருகிட பொருமி விம்மி மருவிய வுண்டி தள்ளி
மலத்தையம் மரிப்பதன்னில் பெருகிய வுதிர தோஷம்
பெரு வயறென்னலாமே.

<u>இதற்கு மருந்து</u>:- வெள்ளாட்டு கோமயம் ஒலே வைத்து நெல்லரிசி மாவு படிவால் மிளகு [illegible] பொடி பண்ணி தட்டை எடை 1, நெற்று தேங்காய் 1 திருவி எல்லாம் கூட்டி கோமயத்தினில் கொட்டி நெல்லிக்காய் அளவு சாப்பிட்டு வரவும். நீங்கும்.

வாத குன்ம~~த்தின் குணம்~~.

சந்து தான் உந்தி வற்றி தழலென வயிற்றித் தோன்றி
மந்த காரங்கள் தண்ணீர் அதிகமாம் சரீர வாதை
வந்து தான் தோன்றுமாகில் வகைபட வாத குன்மம்
அந்த மாம் முனிவர் சொன்ன ஆயுரு வேதமாமே.

<u>இதற்கு மருந்து</u>:- குன்மம் கானமும் பொல்லாது கொடிய கடிய வியாதியது, கர்மம் கானமும் மொட்டாது, கள்ளிப் பாலும் இந்துப்பும், தென்னங் காயில் தா ளையடைத்து தீயில் மிகவே புடம் செய்து பன்னக் காயில் பாதி தின்ன போமே வாத குன்மம்.

பித்த குன்மம் ~~குணம்~~.

உள்டியை மாக்கலாகும் ஓமட்டி நெஞ்செரியலாகும்.
பண்டி நின்றெதி எடுத்து வயித்தையும் வலிக்கலாகும்
பண்டு முன் பழ மலத்தில் பைத்தியம் சேர்த்தலாலே
விர்டுதன் பித்த குன்மமிது வென விளம்பலாமே.

தலையும் கனத்து ஓங்காரம் தானே மிகவும் வாயுரும்
நிலையும் கெட்டு கிறுகிறுத்து நின்றே வேர்த்து நெஞ்செரித்து
கொலையும் செய்யம் பித்த குன்மம் குறிக்கும் குணங்கள் இதுவென்றே
கலையால் வல்ல தமிழோரும் கண்டே மிகவும் பேசுவாறே.

இதற்கு மருந்து :- இருசீரகம், திரிகடுகு, இந்துப்பு, பெருங்காயம், ஓமம், சமன் கூட்டி மேனி ரசத்தில் ஊறத்தை சூரணித்து வென்னீரில் வெருகடி பிரமாணம் கொள்ள அல்லல் பட்ட குன்மம் தீரும்.

வாயுவு குன்மம் ~~குணம்~~.

மேல் வயிறதினில் வந்து மிகை பட வலித்தெரித்து
சாலவே வாய் நீர் ஊறி தரிகிடா தேப்ப முண்டாய்
சீலமாம் குளிரு முண்டாம் செருகவே வெதும்பு மேனி
வாலமின் குளலி நாளே வாயுமின் குணமுமாமே.

இதற்கு மருந்து :- வெள்ளருகு, கொடிவேலி, சங்கங்குப்பி, மாவிலிங்கம், நீர் மேல் நெருப்பு புனல் முருங்கை, இதன் சாறுகள் வகைக்கு படி 1, குதிரை மூத்திரம் படி ரு, மெழுகு, சுக்கு, உள்ளி, கஸ்த்தூரி மஞ்சள், அரத்தை, சதகுப்பை, கெந்தகம், மஞ்சள், லவணம் சீனகாரம், சௌக்காரம், காந்தம், திருகள்ளி வேர் சமன் கூட்டி முந்திய ரசங்களில் ஒவ்வொரு நாளும் குதிரை மூத்திரத்தில் ஒரு நாளும், நிழலில் உலர்த்தி உலர்த்தி சூரணித்து தேனில், வென்னீர் கொள்ள வாய்வு குன்மம் தீரும்.

எரிகுன்மம் ~~குணம்~~.

வயிற்றை எரித்து, குடல் பிரட்டி, வாய்நீர் சுரந்து தலை கனத்து, மயிரின் வழியே வியர்வை வெளி வரும், வயிறு பொருமி அகன்றிடில் வயிற்ற எரித்த குன்மமென வானோர் சொன்ன குறிப்பாமே.
பித்தத்தில் வெதுப்பி பன்னி வெருத்திடும் பித்த குன்மம்
சித்தத்தில் வலித் தெரித்து தெளிவுற கழிச்சலாகும்
மெத்த தான் ஈறலோடே மிருந்து தான் எரிந்து உலர்த்தும்
கைத்துதான் நாக்கு தானும் கதித்திடும் குன்மமாமே.

இதற்கு மருந்து :- அரை படி பச்சை பயிர் வேக வைத்து அதில் ஓர் தேங்காய் திருவி போட்டு சீரகம் பலம் 5, சர்க்கரை பலம் .4, கூடப் போட்டு கிளரி நெல்லிக் காய் அளவு சாப்பிடவும்.

சத்தி குன்மம் குணம்.

மயங்கிடும் வெளுக்கு மேனி வாயுவும் மிகுந்துள் பற்றும்
செயங் கெட சத்தி பன்னி செரிக்கிடா தெரிக்கி நெஞ்சு
பயங்கெட வுண்ணவுமடா பயித்தியம் மிகுந்து நின்று
தயங்கியே சத்தி குன்மம் தானெனும் தடங்கள் மாதே.

இதற்கு மருந்து :- என்னை, பஞ்சலவணம், படிகாரம், வெங்காரம், நவாச்சாரம், எள்ளுப்பு நாயுருவி உப்பு, சங்கு பஸ்பம், திப்பிலிமூலம் கடுகு ரோகணி, திப்பிலி, சிறு திப்பிலி, சுக்கு மிளகு வகைக்கு கழஞ்சு, கடுகு பலம் 6, வசம்பு பலம் ௧, ஓமம் படி 2, பன்னிரண்டு வளம் பிடிக்கிற பானையில் போட்டு எட்டு வள்ள தண்ணீர் விட்டு மற்ற சரக்குகளையும்

பொடித்து போட்டு என்ணெயும் விட்டு அறை கலசம் வைத்து அதின் கலயம் வைத்து மேலே ஒரு பாத்திரத்தில் ஜலம் விட்டு வைத்து எரித்தால் கலயத்திற்குள் திரவகமாய் வடிந்திருக்கும். சீசாவில் அடைத்துக் கொண்டு நேரம் களஞ்சி கொள்ள கொண்டை கவுசை அசீர் கோவை பெற நீர் சத்தி குன்மம் தீரும்.

பக்க வாய்வின் ~~குணம்~~.

வற்றி உலை மலந்தேயும் மந்திக்கும் மேல் விழுக்கும்
சற்று எரிசல் தனியாது பற்றிய முத்திரல் பக்கத்தின்
மூச்சிராப்பு வாயுவு என சித்தத்தில் தானே தெளி.

இதற்கு மருந்து:- சுக்கு, மோதகம், துய்ய வெங்காரமும், மிக்க இந்துப்புடன், வெள் ளுள்ளி, காயமும் ஒக்கவே அரைத்தன்டை விழுங்கிட பக்க வாய்வு குணமும் போகுமே.

குன்மத்துக்கு மருந்து.

எருக்கம் பூ .க, படி, கல்லுப்பு படி.க, சம்பள ரசத்தில் வேக வைத்து பெருங்காயம் ¼ விராகனிடை கூட்டி அரைத்து கழற்சி பிரமாணம் 2 நேரமும் கொள்ளவும்.

வேறு.

கெந்தகம் பலம் 1, இந்துப்பு பலம் 1, பெருங்காயம் பலம் 1, 4 வள்ளம் பிடிக்கிற பாத்திரத்தில் நொறுக்கி போட்டு 2 வள்ள 2 காய் சாறு விட்டு மேல் சட்டி மூடி சீலை மண் செய்து 12 சாமம் மந்தாக்கினியாய் எரித்து ஆறின பின் சூரணித்து விராகனிடை தேனில் கொடுக்க வாய்வு குன்மம் தீரும். சர்க்கரையில் பித்த குன்மம் தீரும். வாழ்ப்பழத்தில் எரி குன்மம் தீரும். வெள்ளாட்டு பாலில் ஜன்னி குன்மம் தீரும். இஞ்சி சாற்றில் பித்த குன்மம் தீரும். வெள்ளாட்டுப் பாலும் சாதமும் உப்பு சேர்க்கவும். புளி கூடாது.

கெந்தக சூரணம் அஷ்ட்ட குன்மத்துக்கு.

கெந்தகம் பலம் 6, திரிகடுகு, திரிபலைலை, ஏலம், லவங்கம், வாய்விளங்கம், சனப்ப வென்ற சேங்கோட்டை வகைக்கு பலம் 1, கூட்டி சூரணித்து அரை விராகனிடையாக வாத சரிரத்துக்கு தேனிலும், பித்த சரீரத்திற்கு பசு நெய்யிலும் கொள்ள. அஸ்ட்ட குன்மம் சூலை பதினெட்டு ஜன்னி பதினெட்டு குன்மம், பதினெட்டு, கிராணி 14 பித்தம் 24, அக்கினி மந்தமும் தீரும், தாது விருத்தி, ஆயுள் விருத்தி உன்டாம். புளி விடவும்.

குன்மத்துக்கு விரேசன குடோரி.

கோரை கிழங்கு, சாரணை கிழங்கு, வீல்வக்காய் ஒரு வள்ள தண்ணீர் போட்டு ஒரு படியாய் காய்ச்சி ஜாதிக்காய் விராகனிடை 10, தான்றிக்காய் விராகனிடை 10 ஒரு படி நல்லெண்ணெயில் போட்டு வேக வைத்து எடுத்து ஒரு கரண்டி சாப்பிடவும். இதனடியில் குமேரி குளிகை ரசம், கெந்தகம், வெங்காரம், சயிந்தலவணம், திரிகடுகு, கடுக்காய், நெல்லி வற்றல், தான்றிக்காய், இதுகளுக்கு சரி வாளம் கூட்டி இஞ்சி ரசத்தில் மை போல அரைத்துக் பணவிடை குளிகை செய்து இஞ்சி ரசம், சர்க்கரை, தேனிலிடவும். பேதியாகும். அதிகமானால் குளிர்ந்த ஜலம் சாப்பிடவும்.

~~சீன் பெறமியம்~~. சிறு பிரமியம்

காயும் குளிரும், கனத்து தலை வலிக்கும்
நோயு மிக வுள்ளெரித்து தோன்றுமே காயம்
வறச்சீழ் வருமே பாங்கிசமும் வற்றுமே
போறைச்சின் பெறமியந்தான் பூண்.

மாதரிடமாய் கையால் மார் புணர்ச்சியால் க்ர்த்லெனவே வருநோய் கண்டிலார்
ஆதரவாய் வந்து மிக நொந்து வளரும் பிரமியத்தை இந்நை தனில் கண்டே தெளி வந்து

நொந்து வளரும் பிரமியத்தில் முந்தி இரு வாதமுஊக்குமே பிந்தி அண்ட மெனம் சூரை அதவம் பவுத்திரந்தான் உண்டென்று தானே யுரை.

நீரை யொருக்குமே நிருத்தம மடைப்படுமே பாறை மிகு தோஉஷத்தை பற்றுமே சேர கூடும் புணர்ச்சியால் கூடினல் விந்து கெடும் ஆடும் பிரமியந்தானு

இதற்கு மருந்து:-

தேங்காய் பிஞ்சை தவைத்து குடித்து தெளிந்த நிறைந்தானெடுத்து பாங்காய் கண்டு சர்க்கரை யும் பரிவாய் கூட்டி கொள்ளுவீரானல் நீங்காதிருந்து சீழுரத்தம் நிதமும் இது போல் கொள்ளடவே பாங்காய் இருந்த பிரமியமும் பறந்தே போகும் கண்டாயே. ~~வாதத்தால் வந்த மேகம் வகை அதின் குணத்தை கேளாய் போத வென்னீரு மஞ்சள் பொருத்திடா கடுத்து பின்னும் சீதமும் நரம்பு போல செறந்ததினுமாமே.~~

பித்த மேக நீர் நெற குணம்.

பெகத்திடும் பித்த மேகம் பெரிய தோர் குணத்தை கேளாய்
பதித்திடும் மோரு போலும் பருகிய உப்ப போலும்
கதித்திடும் ரத்தம் போலும் காச்சு செவ்வெழ நீர் போலும்
தித்த தோர் பாசம் போலும் மயிங்கிடும் கள் போலாமே.

சேத்தும மேக நீர் நிற குணம்.

சேத்தும ரோகந்தானும் செய்திடும் குணத்தை கேளாய்
வேற்றிடும் வென்னீர் போல வெந்து தோர் சாம்பல் போலும்
காத்திடும் சுன்ன நீர் போல் கதித்த தோர் அய்யம் போலும்
சாத்திய எழ நீர் கன்னல் எண்ணெ போல வாமே.

நீரழிவின் குணம்.

கோதயர் கலவியாலும் கொருத்த மீனிறச்சியாலும்
மேதயும் பாலும் நெய்யம் விரும்பியே உண் கையாலும்
ஆதிநல் விதியினலும் அவரவர் பாவத்தாலும்
தீது நீரிழவு தானும் தோன்று மென்றறிந்து சொல்லே.

மண்டலம் தனிலுள்ள மனிதனுண் பெண்ணுள்ளோர்கும்
கொண்டதோர் பிர மேகத்தால் கூடு நீறெரித்து நோய்கள்
கண்டிடும் உடல் கை கால்கள் கனக்கவே எரித்து காந்தி
உண்ட நீர் செவெரி கட்டி உடைந்து நீர் பாயுமென்றே.

பிரமியம் நீரடைப்புக்கு.

வாழைக்கிழங்கு சாறு, நிலப்பனை சார், தண்ணிவிட்டான் கிழங்கு சார், நெல்லிக் காய் சார், கருப்பன் சார், ஆலம் விழுதடன், செவ்வெழனீர் பட்டைச் சார், பசுவின் பால், பசு நெய் வகைக்கு படி க, அடுப்பேற்றி சாறு சுண்டி வரும் போது திரிபல சாடாமஞ்சில் ஏலம், அகில், சந்தனம் வகைக்கு பலம் கால். பொடித்து முன்பாகில் போட்டு கிளரி முள்ளிக் காசு அளவு சாப்பிடவும். நீரழிவு, ஜலக்கிரிச்சல், நீர் கடுப்பு போகும்.

நீரடைப்புக்கு.

வாழைக் கிழங்கு சாற்றில் கால் பலம் மெழுகு பொடி பண்ணி போட்டு வெங்காரம் பொரித்துப் போட்டு சற்றுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

ஜலக்கிரிச்சல் குணம்.

மொழிந்திடும் பழைய பிரமி மதனில் முடிக்கிடும் க்டுப் பொர்டு வாதம்
வழிந்த பின் பிழவை பவுத்திரம் மிக்க வன்மையாம் மண்டையின் சூலை

சுழித்திடும் கிரிச்சிரம் மாங்கிஷத் தடைப்பு தொடித்திடும் வெகு ஜல கழிச்சல் பொழிந்திடும் மழை போல எடுத்து மிதனை போக்கிட வகையான உரைப்பாம்.

தகரம் கோஷ்டம், சிறு தேக்கு, ஜாதிக்காய், பொன்னவரை

புன்னைக்கு பொடியுடனே ஆவாரை அரிஞ்சு பின் நெறிஞ்சு வேரும், விண்கை வெயிலில் வைத்து, விரித்து உலர்த்தி பொடி செய்து விளம்பக் கேளாய்
பண்ணும் தேன் மொழியாய் பாலொத்த தேன் கலந்து பரிந்து கையில்
அண்ணந்து தான் விழுங்க நீரிழிவு போமென்றே அறிந்து கொள்ளே.

பவுத்திரம் மேகங்களுக்கு.

சித்திர மூலம் பட்டை, சோமனுத பெருங்காயம், விராகனிடை 8, கோரோசனை திப்பிலி, இந்துப்பு, சாதிக்காய், லவங்கம் வகைக்கு விராகனிடை 4 செங்கத்தாரிப் பட்டை விராகனிடை 16 இது வெல்லாம் அரைத்து 3 படி எள்ளு எண்ணெயில் சிவக்க காய்ச்சி வடித்து தினம் அரைக்கால் படி 21 நாள் கொள்ளவும். ஆவாரை கொழுந்து கட்டவும்.

நீரிழிவுக்கு.

ஆவாரைப் பஞ்சாங்கம், அத்தில் மேல் புல்லுருவி, விளாம்பிசின், சமன் கூட்டி சூரணித்து திரிகடி சூரணத்தில் சர்க்கரையும் கருவங்க செந்தூரமும், பேயன் வாழைப் பழமும் சேர்த்து கலந்து கொடுத்து வர நீங்கும், நீரிழிவு உள்ளவர்கள் தாகத்துக்குப் பானம்.

சொளை நீக்கிய நாலு வில்வப் பழத்தினுள்ளிருக்கும் சொளையை சுரண்டி ஆவாரை வேரும் ஜலத்தில் ஊறவைத்து சாப்பிட்டு வரவும்.

மூத்திர தோஷ கடுப்புக்கு.

செவ்வெள்ள நீரில் தேத்தாங் கொட்டையை அரைத்து சர்க்கரை கூட்டி கொடுக்கவும்.

(வேறு)

வெடியுப்பு, விராகனிடை கஅ. வெங்காரம், (வி) க, பொரித்து இளநீரில் கொடுக்கவும்.

பிரமியத்தின் குணம்.

நீரும் கடுத்து ஜலமடைத்து நின்றே எரித்து சலம் வீழ்ந்து சீழ்மறத்தம் சீழ் உண்டாய். தெனமும்
பாகும் காயம் நாள் சென்றால் பாழாள் வற்றி உடம்பெங்கும் வாளம் சென்றால் மடந்தையர்கள் மயக்கம் சிறத்தும் பிரமியமே.

இதற்கு மருந்து:- தேங்காய் பிஞ்சை துவைத்தெடுத்து தெளிந்த நீர் தானெடுத்து பாங்காய் கண்டு சர்க்கரையும் பூரி வாய் கூட்டிக் கொள்வீரானால் நீங்காதிருந்த சீழரத்தம்,

நிதமும் இதுபோல் கொண்டிடவே பாங்காய் இருந்த பிரமியமும் பறந்தே போகும் கண்டாயே.

ஏழும்புருக்கி வியாதிக்கு.

பொன்னாங்காணி வேர், பூனா வேர், தாழை இலை, இவைகளை எலுமிச்சங்காய் அளவு அரைத்து காடியில் கொடுக்கவும்.

அண்ட வாத குணம்.

கொண்டிடும் குடலில் வாதம் குறைந்த தோர் வெறையார் தோன்றும்
மண்டியே வெறையிலொன்றை வலித்த உடலியுள் வாங்கும்
பண்டு நாழிரண்டு வாதம் பறுசுழல் வாத மென்றும்
அண்ட மா முனிவர் தாமும் அரியவே உரைக்கலுற்றார்.

இதற்கு மருந்து:-

அந்தர வாய்வுக்கு.

பத்து தேங்காய் பிழிந்து சாதிக்காய் வீ. 4, ஜாதிப்பத்திரி வீ. 4, பொடித்து பாலில் போட்டு காய்ச்சிஇறத்து கொடுக்கவும். முடக்கத்தான் சிறுநீரில் வறுத்துக் கட்டவும்.

(வேறு)

முருங்கைப் பூ நாழி, வெள் வெங்காயம் நாழி, இந்துப்பு, கழஞ்சி 4, வெடியுப்பு கழஞ்சு 4, வசம்பு கழஞ்சி 2, கெந்தகம் கழஞ்சி 2, மொடக்கத்தான் பிடி 3, கூட்டி அரைத்து சிற்றாமணக்கெண்ணையில் அடி பற்றாமல் காய்ச்சி உள்ளுக்கு கழஞ்சி கொடுத்து வீக்கத்துக்கு துணியில் பிடித்து போடவும்.

தண்டு பிளவைக்கு.

ஆகாச கெருடன் கிழங்கு, ஆடு தின்னா பாளை வேர், வெள் வெங்காயம், மெழுகு நல்லெண்ணையில் கொதிக்க வைத்து உள்ளுக்கு கொடுக்கவும்.

வேறு.

எட்டி விரை, பேய்பீர்க்கம் விரை, நாயுருவி வேர், மஞ்சளும் கூட்டி தயிலம் இறக்கி புண்ணுக்கு போடவும்.

தர்மாங்கிஉஷ்ணத்துக்கு,

கோழி முட்டை ஓடும், வெங்காரமும், பொரித்து சமனிடை சமன் கூட்டி மொட்டு நாசி சாற்றிலிடவும்.

அரையாப்பு, உஷ்ண வாயுவுக்கு

சித்திர மூலப் பட்டை, சங்க வேர் பட்டை, குமிழ் வேர் பட்டை, வகைக்கு எலுமிச்சங்காய் அளவு அரைத்து சம்பழச் சார் படி 1, புளிச்சி சார் படி1, நல்லெண்ணை படி 1, மெழுகு பலம் வ, சீரகம் பலம் வ, வெள்வெங்காயம் பலம் க, சுக்கு பலம் க, சர்க்கரை பலம் 4, இதகளையும் சூரணித்து முன் அரைத்த பட்டை சாந்தகளையும் முன் எண்ணையில் கலக்சி மெழுகு பதமாய் எரித்து இறக்கி புன்னைக்காய் அளவு இரண்டு நேரமும் கொள்ளவம். புளி, புகை நீக்கவும்.

குப்பை மேனி சாறு, கோனெய்யும் குட்டிடை கொள்ளத் தீரும். சவுக்காரம் தேகமறிந்து வாழைப் பழத்தில் மூன்று நாள் கொள்ள வெள்ளை நிற்கும். சம்பழச் சாறும் நல்லெண்ணையும் கலந்து புளியம் சிராய் சுட்ட சாம்பல் குட்டிடை கூட்டி, 5 நாள் கொடுக்க எந்த பிரமியம், கீழ் பிரமியம் தீரும்.

~~உஷ்ண வாயுவு, நல்ல இந்திரியம் தீர.~~

உஷ்ண வாய்வு நஞ்சுகட்ட இந்திரியம் தீர.

மெழுகு, சுக்கு, ஏலம் வாய்விளங்கம், செவ்வியம், சித்திர மூலம், தும்ருஷ்டகம், வெள்ளுள்ளி, வகைக்கு பலம் 1, தேசாவரம், கடுகு ரோகணி, லவங்கம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வகைக்கு வீ. உரு, பசு நெய் படி 1, வெள் வெங்காயம் தோல் போக்கி அரைத்து நெய்யில் கலக்கி மற்ற சரக்குகளையும் சூரணித்து நெய்யில் கலக்கி கருகாமல் கொதிக்க விட்டு நல்லெண்ணை ஒரு படி, தேன் ஒரு படி விட்டு கிளரி. விநாயகர் பூஜை செய்து வைத்துக் கொண்டு கடுக்காய் மாதிரி சாப்பிட. புளி, கிரந்தி பதார்த்தம் நீக்கவும்.

~~தொந்தி~~, சூலை கிராணி மூலக் கழிச்சல் தீரும்.

அரையாப்புக்கு.

நல்லெண்ணை படி 1, மிளகு பலம் 1, சித்திர மூலம் பலம் $\frac{1}{2}$, அரைத்து கூட்டி எரித்து உள்ளுக்கு கொடுக்கவம். கட்டிக்கு ஒத்தம் பத்தும் இடவும்.

மூர்ச்செவாய்வின் குணம்.

வாதமும் மேலதாகி மந்தமாய் பசி இல்லாமல்
பேதமாய் எரிந்து தேகம் பின்பு நீர் கடுத்து சற்றே
சீதமாய் உடலம் நொந்து செறமது விம்மலாகி
போதவே நின்றோர் போல பூமியில் தள்ளுமன்றே.

மூச்சையாம் மூன்றே முக்கால் நாழிகை சென்று தானல்
நீச்சையா நிமிர்ந்து மெய்ய நினைவது வந்து கூடும்
பாச்சையா உடலம் வற்றி பலபல நினைவு தோன்றும்
வாச்சையா மூர்ச்சை வாய்வு வந்தது பெண்ணினலே.

உள்மூல குணம்.

மலத்தை யிருக்கும் மந்திக்கும் வறண்டு ரத்தம் மலத்தில் விழும்
ஒலர்த்தி வருவ துன்மை இது வயிறு வலித்திருக்கும்
தலத்தில் காறைம் மூலம் தசைய் தொல்ழக்கும் தானத்தில்
பெலத்தை குறைக்கும் வியாதி யென பேசி இருப்பார் பெரியோரே.

இதற்கு மருந்து:- காட்டு கறணை, கரிகறணை, காரும் பிரண்டை, செம் பிரண்டை, தோட்ட மெருகும் புளி நறளை தா ~~ன~~ இடித்து சமருக்கி காட்டுக் குத்தி முலைப் பாலில் கலந்தோருண்டை தின்பீராகில் கூட்டோடிடும் உள் மூலம், கோகோ வென்று ஓடிடுமே.

வேறு.

நரி முட்டான் கிழங்கு இடித்து களி கிளரி நல்லெண்ணையிட்டு உண்ணத் தீரும்.

புற மூல குணம்.

தொப்புளும் வலித்து நொந்து தொழுங்கிட ரத்தம் வீழ்ந்து
அப்பொழுது மலமு மூலம் அரியவே வெளியில் தள்ளும்
தப்பற மேனி வற்றி தரிகிடா நடை தோன்றும்
இப்படி புற மூலத்தின் இயல்வினை யெம்பலாமே.

இதற்கு மருந்து:- ஆவளங்கியம், கம்பரிசியம் இடித்து களி கிண்டி நெய் விட்டு உண்ணவும்.

மூல ~~முளைச்சி~~ முளைக்கு.

பேய்பீர்க்கம் காய் தூள், துருசி, சீனக்காரம், நவச்சாரம், பொடித்து தேனில் குழைத்து முளையில் தடவவும். கரையும்.

~~அசுதம்மிலல்~~.

அடைப்பில்.

பொன்னாங்கண்ணி, சாறு, கொட்டைத்தமையில் புழிந்து கையில் வைத்து உள்ளே தடவவும்.

ரத்த கடுப்பு லேகம்.

நெஞ்சி நின்றெதிந்து வாந்தி நின்றது எதுத்து குத்தி
பஞ்சு போல் நாவும் கண்ணும் பாண்டேன வெழுத்தக் காலும்
அஞ்சிட வீக்கம் கண்டு அடிக்கடி குழிரேயாகும்
கெஞ்சிட மலமும் தீயும் கெடு ரத்த கடுப்புதாமே.

இதற்கு மருந்து:- ஆவாரை பூவரிசி, மாதளம் பூவும், இலவம் பிசின் காசு கூட்டி அரைத்து புளித் தயிரில் கொடுக்கவும். (வேறு) எருமைப் பாலில் காய வைக்காமல் தோயவைத்து மாதளை பிஞ்சு இடித்து பிழிந்த சரமும் கூட்டி புளியம் சிராய் சுட்ட சாம்பல் வெகு கடிப் போட்டுக் கொடுக்கவும்.

மொளை மூலத்துக்கு

பேய்ப் பீர்க்கங்காய் இருகம் புல்லில் சுட்டு இடித்து சார் பிழிந்து விளக் கெண்ணை ஒரு உழக்கு விட்டு பதமாய் காய்ச்சி வடித்து வற்றலுக்கு நெய் தொட்டு தைலமும் தொட்டு பவுன வாயால் 7 நாள் தடவிட மொளை கரையும்.

சீதகடுப்பின் லேகம்.

இடுப்பு கடுக்கும் வயிறுமையும், எழரும் சீதம் திகமுமாய்
முடுக்கும் பவனம் கடுத்து திரம் முன்னே சீதம் கலந்து விழும்
அடுத் தோறண்ணம் தனை தேடா தற்வே சுங்கம் மெலிந்து வரும்
தொடுக்கும் சீதகம் மெனவே சொல்லும் நல்ல வல்லோரே.

இதற்கு மருந்து:- வெந்தம் பலம்/1-2 ஆய் அரைத்து தயிரில் கொடுக்கவும். வெள் வெங்காயம் பாலில் வேகவைத்து தயிரில் கொடுக்கவும்.

ரத்த கடுப்புக்கு.

தேத்தாங் கொட்டை காவிக்கல், சீரகம், ஏலரிசி, வெல்லம் கூட்டி அரைத்து நெய்யில் குழப்பி கொடுக்கவும். (வேறு) ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, நல்ல சீரகம், கரும் சீரகம், ஓமம், கடுகு, வெந்தயம், மெழுகு, திப்பிலி, கிராம்பு, ஏலம், சமன் கூட்டி வறுத்து பொடித்து நெய்யில் குழப்பி கொள்ளவும்.

கிரணிக்கு போட குளிகை.

கிட்டும் முனி வனத்த பின் கஞ்ஜா கெழற் முன் சாற்றில் அரைத்து அடை
சுட்டு மற்றன் சாற்றரைத்து, தூது விளங்காய் பிரமாணம் கட்டி
தயிரில் தான் கொடுக்க கனத்த கிரணி அதிசாரம்
மட்டு மண்ணரும் கழிச்சலெல்லாம் மாயோன் சொன்ன மருந்ததிறவே.

கேரைக் கிழங்கு சாற்றிலும், கஞ்ஜா சாயத்திலும் முன் குழிகையை அரைக்கலாம்.

கடுப்புக்கு குழிகை.

மேவீ சாதிக்காய் பிணி மிகுந்த சுக்கு ஓமமுடன்
தாபில்வங்கம் ஜாபத்திரி, தனைத்த மாதளை காயிலிட்டு
காணும் கருக புடமிட்டு கஞ்ஜா சாற்றிலரைத்து உருட்டி
விழிறையும் தயிரிலிட நாலாக் கிரணி தீர்ந்திடுமே.

ஆயுரு வேத முன்னோர்-அடவுடன் பேசி வைத்த நேய்
மிரு பிழவை தன்னை நோயற தீர்க்க வேண்டி வாய்மையாம்
மருந்து காறம் மற்றுழ பரிகாரங்கள் தூய்மையாய்
தெழிந்துக் கொண்டு சுகம் பட மருந்து செய்யே.

பெரிய பிழவையின் குணம்.

பெரிய பிழவை முள்ளெலும்பில் பெருக்க உழைத்து நடு முதுகில்
அருமை அதுவும் மாறுது அடங்காதுடலை அதுகொடுக்கும்
அரியப் பொன்னுவரை எறையம் அதுவும் புன்னைக்காயழவும்
உரியப் பழ மோர் தனில் கொடுக்க உடலைத் தாபம் ஒடுமே.

முதுகிட முள்ழந் தண்டில் முன்றியே மாங்காய் போல
பிதிறவே வலுத்தப்பு பண்ணும் பிழவையும் பல கண்ணுயில்
மதியுரு மருந்திலும் மற்றுழக்கருவிலும்
விதி யதின்படியே என்ன வேத மா முனிவர் சொன்னர்.

செப்புடன் குத்து மூச்சு சேர்ந்திடும் தடலை சோபம்
தப்பிடா நாவறச்சி தருகிடா சலத்தின் வாதம்
முப்புறம்கண்ணே போன்றும் முறைமையில் வியாதி தானும்
இப்படி குணங்களெல்லாம் இரு வகைப் பிழவையாமே.

மார்பினில் யீறல் தன்னில் மருப்படா தண்டங் கோல் போல்
நேர் பட செம்மையாகி நிற்பதே வாயு நெஞ்சில்
கார் சொரி குழலிருமே கனுதிவை கீரிக்காறம்
பேர் பட பக்கமான பிழவையும் விட்டு போமே.

முதகு புறத்திலுறை போல முள்ழள் தண்டு தனை தப்பி
இதுவே வடிாகில் மறணமில்லை எனவே கண்கழ் அடைப்படுமேல்
ததுவே மேனி குழிர் சுறமும் தபனம் மொடலைக் குழிச்சவுடன்
இதுதான் பக்கப் பிழவை யென எடுத்தே காறம் கீரியிடே.

இதற்கு காரம் :- காரம் துருசு பாசாணம் கதித்த தழலில் குரையாமல் சேரப்
பொடியாய் வெண்ணையுடன் திரும்ப அரைத்து சீலையிலே தடவி புண்ணதனிலுள்ளே
தட்டி விடுவீரால் பாறப் பிழவை கறைந்தருகி புறந்தே போகும் கண்டாயே.

பிறந்திடும் புண்ணில் காரம் பகைத்தன்னு திருக்கயாலே
எரிந்திடும் தயிரும் சோாம் செந்துவை மூன்று நாளும்
அரிந்து வையமதாய் கட்டி அவீழ்த்து வேறே பற்றி
செறந்திடு எண்ணை பண்ணி பிசைந்து நீ மருந்து செய்யே.

இதற்கு மருந்து :- வஞ்சிக் கொடியார் முலைப் பாலில் வதக்கி பூங்கோடா வெண்ணை
நெஞ்சைப்படியே அரைத் தொன்றில் நிரம்ப வழித்து அகலில் வைத்து
வஞ்சப் பிழவை முக மதனில் மானே மிகவும் வைத்தீரால்
கெஞ்சும் சுரமோ உடலை மிக கெட்டே போகும் கண்டாயே.

செயவிறை தன்ப தொக்க தீயவே வருத்த நாளாய்
தயவீயா வாறை வேரு தன்னையும் பொடித்துக் கூட்டி
வெயவீய பெழவை தன்னில் விழுங்கி நெய் பூசித் தூழை
குயவிடத் தூ வநீரும் குருகியே உலரும் புண்ணே.

குதிரை வலிப்பின் குணம். 4

என்னரும் சன்னி வாதத்தில் இதுவும் குதிரை வலுப் பென்ன
கண்ணரும் பருவம் கதிப்பாரும் கையும் காலும் ஒரு பக்கம்
தண்ணீர் கறயில் மிகுந்து தழுமும் தகவே திருக வலியுண்டாம்
விண்ணைப் பார்த்து விழிப்பிக்கும் மீழுதிசுவும் திண்ணமிதே.

குத்தல் தொடுத்த மூன்று நாழ் கொல்லாதிருந்தாலவை நக்கி
வுத்தார் நாழி ஒன்பது நாழ் ஒக்க சுரமும் வந்திடில்
ஒத்தார் கபமும் ~~தாளைக்கு~~ தானடைத்து உறத்துள் மூச்சு மேல் நேக்கும்

பிறவியத்தின் குணம்.

அடுத்தடுத்தேடுத்தே குத்தி அதிகமாய் இன்றத்து வேற்று
அடுத்து நா தடித்துப் பேசி பல்லது கிட்டி நெஞ்சு
அடுக்கவே கட்டிச் சீரி அங்கமும் பிறகே வீழ்ந்தால்
திருக்கிடில் பெறவீச் சென்ற செப்பலா செப்பலாமே.

இதற்கு மருந்து:- திருவக்கள்ளி வேர் பட்டை, கடுகு, மெழுகு, திப்பிலி வெள்ளுள்ளி, வசம்ப வலம் புரிக்காய், இதுகளை பொடித்து விளக்கெண்ணை நல்லெண்ணை வேப்பெண்ணையில் கூட்டி உள்ளுக்கு கொடுத்து மேலுக்கு பிடிப்பிக்கவும். இதற்கு வேண்டிய நசியம் கலிக்கம் ஒத்து பத்து செய்யவும்.

இஞ்சியும் வெள் வெங்காயம் நசுக்கி நசியமிடவும்

பாசிச வாத சன்னி ~~யின் குணம்~~.க்கு

கையம் காலும் ஒரு பக்கம் கனக்க திமிர்ந்து சார்வாக
மெய்யு மறவே மெலிந்து வரும் வெதும்பும் நாவுதடு மாறும்
செய்யும் குணத்தை நாடி அரி செப்பும் பாரிச வாத சன்னி
உய்யும்படியே தானரிய ஒல கோறரிய சொன்னேமே.

இதற்கு மருந்து:- சேராங் கொட்டை பலம் 1, ஓமம் பலம் 5, வெள்ளுள்ளி பலம் 5, சித்திர மூலம் பலம் 5, நஞ்சின்டான் பட்டை வேர் பலம் 5, கொப்பரை தேங்காய் பலம் 5, நல்ல வெல்லம் பலம் 2 சேர்த்து இடித்து முந்திரிக்கா அளவு 2 நேரமும் சாப்பிடவும். கிரந்தி பதார்த்தம் நீக்கவும்.

10 வகை வலிப்பின் பெயர்.

1. சாலியன், 2. சிரச, 3.அக்கினி, 4. திரேகணி, 5. சாந்தி, 6.ஆயிரம் குஞ்ஜரி, 7.திரிபாதி, 8.நிச்சலி, 9.எச்சலி, 10. ———— இது கழின் குணம்.

சாலியன் தீ யெரி கண்டால் வரும். சிரசு மழைக் கண்டால் வரும். வாகினி கார நடந்தால் வரும். அக்கினி மழையில் நடந்தால் வரும். திரேகணி தண்ணீர் கண்டால் வரும். சாந்தி இரவும் பகலும் வரும். ஆயிரம் குஞ்ஜரி நடையிலும், அமாசி மௌறணியிலும் வரும். திரிபாதி சிரித்தால் வரும், நிச்சலி வயிறு முருக்கிலை போல் வரும். எச்சலி

இதற்கு நசியம்:- முருங்கைத் தழையும் கல்லுப்பும் நசியம் பண்ணவும்.

2. பழுப்பாகல் ஞாயிற்று கிழமை காப்புக் கட்டி உடனே பிடிங்கி ஒரு தலை பூண்டு கூட்டி நசுக்கி சிறு நீரில் நசியம் பண்ணவும். அந்த கிழங்கை முயல் கண்ட வசப்புக்கு நசியம் பண்ணவும்.

21.8.62

கண்ணோவின் குணம்.

கண்ணது அடர்ந்து பொங்கும் காரணமேதோ வென்னில்
நண்ணிய தண்ணீர் தன்னில் நாளது பருகையாலும்
திண்ணிய வறட்சியாலும் சேர்ந்தெண்ணை போகத்தாலும்
விண்ணிடை வெய்யிலாலும் விளங்கிடும் கண்ணில் நோவே.

மனமிடி தன்னிலும் மாதர்களாசையாலும் துணமிலா சேர்க்கையிலும்
குவிந்திடும் பார்வையாலும் தன ~~மிக்க வக்கு~~ [மிக்கசாரு] கையாலும் கணவிலா
நடையிலும் சினமிகு கோபத்தாலும்
சேர்ந்திடும் கண்ணில் நோவே.

தடியடி படுகையாலும் தன் தலைச் சுமையிலும்
முடிகிய வெய்யிலாலும் மொயன்றெண்ணை போகத்தாலும்
வீடு மலக் கட்டிலும் வெவ்விய கோபத்தாலும்
படி ஏழு கூர்மையாலும் பறந்தெழுங் கண்ணில் நோவே.

கண்ட மதி தனில் பலமுண்டாய் கதிக்க மண்டை வறட்சி
தன்னால் துண்டம் புருவம் கூடு தன்னில் சுழியில் கண்ணில் குத்தலுண்டாய்
மண்டை துயர மிகவுண்டாய் வலை போல் கண்ணறும் தெரியாமல்
மண்டை முழுதும் பறந்து குத்தும் மதிக்கு நேத்திர வாயுவிதே.

தெளிவுற வொழியாய் நிற்கும் தியங்கியே முப்பத்தஞ்சில்
ஒழியற சிவந்து சற்றே ஒதுங்கிடும் நாற்பத்தஞ்சில்
விழியற இரண்டு நிற்கும் மேவிடும் ஐம்பத்தைந்தில்
அழியுற புகையும் கண்ணோய் ஆண்டொரு நூறில் தானே.

வெள்ளையிர் சிகப்பதன்றி விளங்கு நற்படியம் போல
தெள்ளிய சோதி தன்னில் சேர்ந்தரி வெண்மையாகி
உள்ளொளி விளங்கும் போதும் உள்முகம் விளங்கித்
தோன்றும் ஒளிழிய நயன மென்று ஒப்பது கண்டிடாயே.

கருமணி தன்னில் நோவ கலந்தது நாற்பதைஞ்சு
மருவிய வெள்ளை தன்னில் மண்யி இருபத்தைஞ்சு
அருகுமே னெமயும் மேலே ஆன நோய் பதினறுகும்
பருகுவ கடைக் கண்ணோவு பதினைந்து பளிந்து பார்றே.

கண்ணது கனத்து நொந்து கருதிய நீரும் மல்கி
நண்ணிய புருவம் கர்ணம் நாசியம் மூலம் மூன்று
விண்ணுறத் தலையும் நொந்து விழியுடன் வலித்த போது
எண்ணிய இது தனக்கு இசைந்தது நசியம் தானே.

குழிப்பது வென்னீராகும் கொள்வது சாறு தானும்
பொடிப்பற மெழுகு தண்ணீர் புழிய தில்லாதே நெய் கொளு
தடிப்புள்ள தயிரும் சோறும் தானது ஆகா தென்க
வெடிப்புள்ள இறச்சி மீனும் மிகவுமே ஆகாதென்றே.

கீர் செறி நயனம் தன்னில் சிறந்த நோய் வரா வண்ணம்
கார் செறி குழலினளே கருதியே தந்த சுத்தி
நீர் செறியா எருக்கு நிறைந்த வேல் மருதம் பூலா
பார்மிசை பச்சை கொண்டு பசைபற தேயுமன்றே.

கண்ணறு நோய் தெழிவிலாத காரியம் கேள்பீராக
மண்ணுற நடத்தலாலும் வன் புகை வெய்யலாலும்
பண்ணவரும் குளிர்ந்த தண்ணீரை பரிவுடன் கழித்தலாலும்
மண்ணி நில் மனிதற்கெல்லாம் வந்திடும் கண்ணில் நோயே.

கண்ணறு நோய் தெளிவதாகும் காரியம் கேள்பீராக
பண்ணுற நடத்தல் சாமம் வான் வெய்யலில்லாதாலும்
பண்ணும் குளிர்ந்த தண்ணீரை பரிவுடன் குளித்தலாலும்
மண்ணில் மனிதர் கெல்லாம் வருந்த நோய் வாரு தென்னே.

பாதமும் பல கால் கல்லில் பசையற்ற தேய்த்து நீரில்
போதவே பசுவின் நெய்யில் பூசியே மாற்றும் போது
கோதரு தென் மாவாலே குலவியே கழிவிப் பின் ஊன
சீதமாய் சாந்தம் பூச சிறந்த கண் குளிர்ந்து போமே.

கண்ணுதான் பல காலங்கள் கருதியே இருண்டு வந்தால்
நண்ணிய உள்ங்காலில் நரு நெய்யை மிகவும் தேய்த்து
திண்ணிய தவுடு மாவால் சிவக்கவே பூசி மாற்ற
தன்னென கழுவி சாந்தம் தனை பூச சாந்தமாமே.

கடிகியே வெய்யிலில் காய்ந்தும் தீயினில் விடமது
கிண்டி பசு நெய் படி அரை தேன் படித் கால் விட்டு கிளறி பாக்களவு இரு நேரம் ஒரு மண்டலங் கொள்ள வாத வாய்வு, பித்தம், வாந்தி சூலை, இசிவு, அரோசிகம் குன்மம், பித்த எரிச்சல் கடுப்பு வலி, பித்த கோபம் அன்னத்து வேஷம் இவை தீரும். குமரித்தயிலம் முற்க.

<u>ரசகற்பூர என்ணை.</u>

கால் ரூபாய் எடை பூரத்தில் முலைப் பால் முழுக விட்டு மற்று நாள் இருத்த பின்னும் புதிய பாலில் முழுக விட்டு மற்று நாள் கழுவி எடுக்க சுத்தியாம். அரைச் சேர் விளக்கெண்ணையில் கை கொண்ட ஈரவெங்காயத்தை மண் பாத்திரத்திட்டு எரிக்கவும் வெங்காயம் பொந்தாகும் வரையில் எரித்து எண்ணெயை இருத்து கொள்ளவும். சுத்தி செய்த பூரத்தை கல்வத்திட்டு முலைப் பால் விட்டு இரண்டு சாம நேரம் அரைத்து உலர்ந்த சமயத்தில் மேற்கண்ட எண்ணையை ஒவ்வொரு கரண்டியாய் விட்டு அரைத்து இவ்விதமாக பூரா யெண்ணையையும் விட்டு அரைத்து சீசாவில் அடைக்கவும். வியாதியஸ்தர் களுக்கு காலையில் கால்ரூ சுமார் மேற்கண்ட அரைத்தத எண்ணையை கலக்கி சாப்பிட கொடுக்கவும். பேதியாம், இவ்விதம் 4-5 நாளை கொடுக்கையில் மலத்துடன் இரத்த குரி கண்டால் அன்று மருந்து நிறுத்தி விடவும். நித்தியம் பசும்பால் அன்னம் கொடுக்கவும்

<u>செவ்வட்டை குட்டத்திற்கு.</u>

சிந்தி பலம் 2, 2படி வெள்ளாட்டு பாலில் சுண்ட காய்ச்சி பின் ஆவின் பாலில் அவித்து காம்பு நீக்கி காயவைத்து சமன் சுரெள்ளி இடித்து பின் நல்ல வெல்லம் பலம் இரண்டிட்டு விளாங்காயளவு மேனி தழையும் சேர்த்து மெழுகு போல் இடித்து நித்தியம் காலையில் சுண்டக் காயளவு தின்று பின் முள்ளிக் காயளவு 2 மண்டலம் சாப்பிட தீரும் வியாதி செவ்வட்டி கடி, குஷ்டம், குரை நோய், ரணங்கள் தீரும். பத்தியம் உப்பில் மேனிதழை இட்டு வறுத்து சாம்பலை நீக்கி அரை உழக்கு சேர்க்கவும். பசும்பால் வெள்ளாட்டு பால், முருங்க இலை முருங்கை பிஞ்சு, கத்தரி பிஞ்சு, துவரைப்பருப்பு, மிளகு, வென்னீர் கூட்டவும்.

<u>குட்டத்திற்கு.</u>

பசுவின் பால் சுத்தி செய்த கெந்தி கழஞ்சு 10, வாழ ரசம் களஞ்சி 1 சேர்த்து மை போல் அரைத்து தினம் பணவிடை 1 தேனில் 1 மண்டலம் கொள்ள சகல குட்டம் தீரும். 2 மண்டலம் கொள்ள தாதுவிர்த்தியாம், நரைதிரை மாறும். உப்பு, புளி, காடாப்பு விடவும். பால் நெய் துவரைப்பருப்பு துவரை சேர்க்கவும்.

<u>மேகத்திற்கு.</u>

கெந்தி விராகனிடை $1\frac{1}{2}$, அம்மான் பச்சரிசி விராகனிடை கூட்டி அரைத்து தயிரில் கலக்கி அந்தி சந்தி 1 மண்டலம் கொள்ள 24 வாய்வு 18 வகை கிரந்தி 21 மேகம், தீரும, இச்சாபத்தியம் வீரிய விர்த்தி உண்டாம்.

<u>சகல வாத ரோகத்திற்கும்.</u>

சுத்தி செய்த 38 பலம் கெந்தி, வல்லாதி 32 சாணி பாலிலும் பசுவின் பாலிலும் சுத்தி செய்த கொட்டையை ஆவின் பாலில் அரைத்து திரிகடுகு, தேசாவரம், மூலவேர் பட்டை வகைக்கு பலம் வ இவைகளுடன் முன் கெந்தியையும் சேர்த்து பொடித்து வடித்து தேன் படி $\frac{1}{2}$, நெய் படி $\frac{1}{2}$, மேற்கண்ட சூரணங்களில் விட்டு நல்லாய் பிசைந்து நெய் பாத்திரத்திட்டு சுண்டைக் காயளவு சாப்பிட சர்வ வாதம், மேகம், கிரந்தி, வெடி, சூலை, தினவு தீரும். இச்சாபத்தியம்.

<u>உஷ்ணங்களுக்கு பாடல்.</u>

கண்டங்கத்தரி மாகாளி காரெள்ளெண்ணை படி அரைக்கால்
இரண்டுந் சேர்த்து சரித்து எதமாயருந்த உஷ்ணங்கள்
பண்டு பகவான் ரவிைக் கண்ட பனி போல் நீங்கி நடுநடுங்கு
கொண்ட நீட்டு பேரரென்று செப்பி யோடும் கண்டீரே.

அருக்கன் சாரு நாழியதாம் அதிமதுரம் மென் கழஞ்சி

அருக்கன் சாறு நாழியதாம் அதிக மதுரம் மென் களஞ்சி
நறு நெய் நாழி பால் நாழி நன்றாய் காய்ச்சி அருந்திட
வேகுருக வலிக்கும் உஷ்ணங்கள் ஞானமாம் வாய்வு இவை யெல்லாம்
மருவி பனி போல் தீர்ந்து விடும் மாதே ரோகம் கண்டாயே.

சீரகம், தேத்தாங் கொட்டை திப்பிலி மிளகு சுக்கு திப்பாரிய மஞ்சலோமம்
பரிமள சந்தனத் தூள் நேரிய குங்குமப்பு, நேரகாய் பஞ்சிஷாட்டி கனலிடை கொளுத்தி
காட்டே பீனிசம் சலதோஷங்கள் பீடையாம் தலை நோக்காடு ஆனியாய் வந்த
சன்னி அதிர்ந்திடும் நேத்திர வாய்வு.

இருமலுக்கு கற்பூர சூரணம்.

அரிய ஏலம், திரிகடுகு அரத்தை மூலம் ஜாதிக்காய்
பெரிய சூடம் கற்பூரம் பேனயும் வில்லைப் பொடியுடனே உரிய தா ?
உரிய தாளிச பத்திரியும் உற்ற கிராம்பு ஙன் சமன் பொடித்து
தெரிய வெருக்கடி தேந்திலே தின்ன இருமல் தீர்ந்து விடும்.

ஆறா புண்ணுக்கு.

மண் வெட்டியை நெருப்பில் காய்ச்சி அதில் பங்கம்பாளை ரசமும் பழச் சாறும் விட்டு இரும்பு சுத்தியில் தேய்க்க களிம்பாம். புண்ணிலிட ஆறும்.

வெள்ளைக்கு.

புன்னிய விருக்ஷம் பட்டை, இலவம் பட்டை பொடித்து வடித்து சீனி கலந்து ஆவின் நெய்யில் அருந்த தீரும்.

பித்தத்திற்கு.

பஞ்சு தாரை இருகளஞ்சி பருத்த மதுரம் முக்கள்ஞ்சி
இஞ்சி திப்பிலி இரு களஞ்சு ஏலம் தானும் ஒரு களஞ்சி
அஞ்சு மிதனை பொடி செய்து ஆவின் பாலில் கொள்வீரால்
மிஞ்சு பித்தம் தலை நோயும் வெள்ளோக்காளம்.

ஏலாதி சூரணம்.

ஏலம், லவுங்கம், லவுங்கபத்திரி, லவுங்கப்பட்டை, திப்பிலி, திப்பிலிமூலம், சடாமாஞ்சல் கொத்தமல்லி, கோரகிழங்கு, செவியும் சிறுநாகப்பூ, பேரீச்சம்பழம். மிந்திரி பழம், தாளிச பத்திரி, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், சந்தனம், கூகைநீட்டா, நன்னாரி வேர், நெருஞ்சி வேர், சாரணை வேர், நிலைப் பனை கிழங்கு, நிலவேம்பு அமுக்குரா கிழங்கு இவை சமம் பொடித்து வடியில் குழைத்த தருந்த தீரும் வியாதி படர் தாமரை, செவ்வட்டை கடி, பெருந் தெனை வண்டு கடி, மந்தாகி கிளி, பயித்தியம், காமாலை ஆடாதோடை, சோகை, ஈளை, இருமல், பான்டு குளப்பை மருத்தீடு தீரும். விநாயகர் பூசை செய்து சாப்பிடவும்.

பிரமியத்திற்கு.

1. சுமை கொமரி வேர் வாட்டி இடித்து குறுணி சார் வாங்கி சீனி சேர் ½, சேர்த்து பாகு செய்து கிராம்பு ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வகைக்கு விராகனிடை 4, ஏலம் வீ3, ரேகம் வீ 8, மிளகு வீ 16, இங்கு வீ3, இவைகளை பொடித்து பாகில் சேர்த்து கிளரி காலை மாலைநெல்லிக்காய் பருமன் கொள்ள , மேக வெட்டை 21, பிரமியம் 21, மூத்திரகிரிச்சம் தீரும். இச்சா பத்தியம்.

கை கால் எரிவுக்கு.

நெருஞ்சி வேர், செம்பு நெருஞ்சி வேர், கோ பாலில் அரைத்துசீனி சேர்த்து கலக்கி அருந்த தீரும்.

லோக பற்பம்.

லோக பற்பம்

லோகம் பலம் 20 அம்மியிலிட்டு பங்கம் பாளை ரசத்தில் மை போல் அரைத்து சட்டியிலிட்டு பெரித்து பின்னும் ரசத்தை விட்டு வறுக்க பஸ்பம் கையாந்த கரை சாற்றில் பலம் 3 [illegible] நாள் கொள்ள க்ஷயம், மேகம், சோவை, காமாலை தீரும். ஆவாரை பட்டை ரசத்தில் இட கிராணி தீரும்.

மகோதரத்திற்கு.

கிளிஞ்சில், பொடித்து தேனிஞ்சி ரசத்தில் கொள்ள மகோதரம் மேல் கவிசை கீழ்க் கவிசை பெருவயிறு நீங்கும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. தினம் வென்னீர் விட்டுக கொள்ளவும். பிரமாணம் [illegible] வெருக்கடி.

இரைப்புக்கு.

கொடிவேலி, மேனி, வேலிபருத்தி வகைக்கு கால்படி ரசம் எடுத்து சுத்தித்த கெந்தி பலம் 5 சேர்த்து மை போல் அரைத்து வெள்ளிய சீலையில் காயவைத்து திரித்து விளக்கெண்ணெயில் ஊர வைத்து சுடர் தயிலம் இறைக்கி குன்றி எடை தயிலம் வெற்றிலையில் உண்ண இரைப்பு தீரும். இச்சா பத்தியம்.

இழுப்பு வலிக்கு.

கருங் கொள் வீ. 3, உளுந்து வீ5, சுக்கு வீ. 1, திப்பிலி வீ. 1, சகதேவி பூண்டு வீ. 1, இவைகளை கஷாயமிட்டு கொடுக்க தீரும்.

சோவைக்கு கஷாயம்.

நீர்முள்ளி தண்டு, சொர தண்டு, சிருநெருஞ்சி, சிருபூளை, கண்டங்கத்திரிவேர் வகைக்கு பிடி 1 கஷாயமிட்டு இதற்கு வருத்த சுக்கு வருத்த திப்பிலி வகைக்கு பலம் செ பொடித்து வெங்காரம் பலம் செ. எரித்தகஷாயத்திலிட்டு 3 நாள் கொடுக்க இவ்விதம் விட்டு விட்டு 9 நாள் 3 தடவை கொடுக்கவம். சோவை தீரும்.

வீக்க சுரங்களுக்கு கஷாயம்

மூங்கில் இலை, நீர் முள்ளி, தண்டிலை, சிந்தி தண்டு, சாரணை வேர்இ முசுமுசுக்கை தூதவளை, ரத்தச் சூரி எலுமிச்சம் இலை, செம்முள்ளி, துளசி, கஞ்சோங் கோரை, விஷ்ணுகாந்தி, குத்தா முட்டி, பேராமுட்டி, இவைகள் மண் பாத்திரத்திலிட்டு 1க்கு 4 பங்கு ஜலம் விட்டு $\frac{1}{4}$ பாகமாய் காய்ச்சி வேலைக்கு 3 ரூபாய் எடை சாப்பிடவும்.

தீரும் வியாதிகள்:-

பிரசவ ஸ்திரிகளுக்கு காய்ச்சலுக்கு.

சித்தா முட்டி சீந்திலொடு முத்தக் காசு திகழெருக்கன் வேர் சுக்கு நிலவேம்போடு புத்தியுள்ள பேராமுட்டி கஷாய மிட்டு புகழ் பரவே திப்பிலி மேன் பொடியும் தூவிடல் தத்தை யெனும் பேரா மொழியார்கள் பிள்ளை பெற்று தனியறையிலிருக்கையிலே சுர மேலந்தால் சுத்தமொடு தீர்ந்து விடு மென்று யெங்கள் சுவாமியவர்மாபிறக்கு சொன்னவாரே:

வீரியத்திற்கு.

1. நத்த சூரி விரை, சலத்தில்அரைத்து மிளகளவு உருட்டி காலை மாலை கொள்ள வீரியம் உண்டாம்.
2. நிலைப்பனை கிழங்கு சூரிய வித்து வகைக்கு வீ 1 பசுவின் பால் அரைத்து சீனி சேர்த்து சாப்பிட வீரியமுண்டாம்.

கீழ் பிரமியத்திற்கு.

பச்சைகுங்கிலியம் பலம் 1 பொடித்து நாரம்பழம் 5 எள்ளெண்ணெய் படி ½, மூன்றையும் மத்தித்து இரவு பனியில் வைத்து காலையில் சாப்பிட தீரும்.

கிரந்தி புண்களுக்கு.

ரசம் வீ 2, துருசு, வீ ரு, வெள்ள குங்கிலியம் வீ. 4, இம்மூன்றையும் ஆவின் வெண்ணையில் அரைத்து பரனியில் அடைத்து புண்ணிலிட (புண்களுக்கு வேறு) புளிய இலை,

பாவட்ட இலை, பொடு இலை, துளசி இலை, தென்னிலை இவை துவைத்து பானை யிலிட்டு கால் பானை நீர் விட்டு அடுப்பில் வைத்து அடுப்பில் 8 செங்கல் முட்டை இட்டு கல் பழுக்க எரித்து நோயாளி முன் வேறு பானையை வைத்து சுட்ட செங்கலை ஒவ்வொன்றாக போட்டு துணியில் மூடி புண்ணிலும், திரேகத்திலும் வேது பிடிக்க ஆறாத புண் ஆறும்.

சீம் பிரமியத்திற்கு.

நல்லெண்ணெயும் மேதி நீரும் மத்திக்க நெறங்கு போலாம் இதை மூன்று நாள் கொடுக்க தீரும்.

நாள்பட்ட உஷ்ணங்களுக்கு.

தாழைவிழுது, முனை அறுத்து பொந்தை கட்டி வைக்க சலம் விழும். அதில் ரேகம் சீனி இட்டருந்த 3 நாளில் தீரும். கைப்பு, புளி விடவும்.

கல் தெறிக்க.

கொமரி வேர் அனலில் வெதுப்பி தோல் நீக்கி இடித்து பிழிந்த சார் பலம் 1, பசு நெய் பலம் 1 திரிகடி சீரகத்தூள் கலந்து சாப்பிட 3 நாள் கைப்பு, புடிள் விடவும்.

உஷ்ணத்திற்கு.

பசு நெய், தில நெய், சமம் கூட்டி எரிக்கையில் வெத்திலை வெடித்த பதத்தில் வேண்டிய பச்ச குங்கிலியம் பொடி போட்டு கரையெரித்து நீரில் சாய்த்து பிசைய வெண்ணெயாம். ஜலத்தை இறுத்து 7 தடவை பச்ச நீர் விட்டு கழுவி இதில் சீரகம் சுக்கு, திப்பிலி ஏலம், வகைக்கு வீ 1வறுத்து பொடித்து முன் மருந்தில் கலந்து சாப்பிட உஷ்ணம் தீரும். (வேறு)

பசு நெய் பாக்களவில் மேனி ரசம் 10 துளி விட்டு மத்தித்துண்ண சகல உஷ்ணமும் தீரும். பத்தியம் பாலும் சோறும். (வேறு)

சூடங்கத்திரி, சமூலம் ரசம் படி, நல்லெண்ணெ படி சனியில் சுத்தி செய்த வெங்காரம் பொரித்து 1 பணவிடை இட்டு தேனிட்டுண்ண சகல உஷ்ணமும் தீரும்.

இரத்த பிரமியத்திற்கு.

சிறு நெரிஞ்சி வேர், சம்பளத்தளவ வெந்நீரில் அரைத்து அருந்த மாறும்.

செங்கத்தாரி இலையை ஆவின் பாலில் அரைத்து அருந்த மாறும்.

வெள்ளரி, ஏலம், இந்துப்பு சமம் காடியில் அரைத்து அருந்த மூத்திரம் இறுத்தல் மாறும்.

பழத்தளவு சிறு முன்னை வேர் அரைத்து சீரகம் நல்ல வெல்லம் செய் விழுது கூட்டி ஆவின் பாலில் அருந்த ரத்தம் மாறும்.

உஷ்ணத்திற்கு.

சுக்கு பலம் 2, வெண்ணை போல் இரைத்து 5 அடையாய் தட்டி சட்டியில் ழ படி நல்லெண்ணெ விட்டு அடுப்பேத்தி அடை இட்டு சிவந்த பதமாய் எரித்து நாக்கி அதில் பச்சை நல்லெண்ணெ படி ரு விட்டு அடையுடன் சேர்த்தரைத்து கலக்கி 1 கரண்டி எண்ணெ வீதம் 15 நாள் உண்ண பத்தியம் புழுங்கலரிசி, அன்னம் முருங்க கீரை, துவரம் பருப்பு, பசுவின் பால் வறுத்த உப்பு, சுட்டவும், புளி நீக்கவும்.

சலக் கழிச்சல் பிரமியம் வெகு மூத்திரத்திற்கு.

மாதமொரு நாள் வரும் மோடி கல்லடைக்கும்
சேதமுற மிகுதி செய்விக்கும் (வாதம்)
வருமே பவுத்திரமும் வன்பக்கச் சூலை
தருமே சலப் பிரமியந்தான்.

இதற்கு மருந்து:- பொன்னுவாரை விரை படி 1, நிலை ஆவாரை விரை படி 1, எள வரகரிசி படி 1, பெரும் பூளை படி 1, கருவேப்பிலை 2 இவைகளை வறுத்து பொரிமா செய்து ரு மண்டலம் கொள்ளவும்.

(வாந்திக்கு) ஏலம் கஷாயம் செய்து கொடுக்கவும்.

நீர்ழிவுக்கு.

ஆவரை நாவல் கொன்றை அழகு பூவரசின் பூவும்
மேவிய மருதன் பட்டை விரை கமிழ் தாழம் பூவும்
குழலினளே பொருந்திய தேனில் கொள்ள
காவிரி நீரும் வற்றி கடல்களும் வற்றுமன்றே.

பீனிசத்திற்கு.

ஆடாதோடை ரசமும் நல்லெண்ணெயும் கலந்து காய்ச்சி முழுக தீரும்.

அக்கினி மந்த இரைச்சலுக்கு.

பாலும் நீரும் கூட்டி வெள்ளுள்ளி உரித்திடு குழம்பு செய்து சாப்பிட இரைச்சல் தீர்ந்து அன்னம் செவ்விக்கும்.

விரை வாதத்திற்கு.

தேங்காய் பால், நொச்சி இலை ரசம், சுக்கு, மிளகு வெள்ளுள்ளி கூட்டி அரைத்து காய்ச்சி கொடுக்க விரை வாதம் கழல் வாதமும், குடல் வாதமும் தீரும்.

கண்ணோய்க்கு

லவணம், முலைப்பால், எண்ணெயும் கலந்து துணியில் தொட்டு பிழிய தீரும்.

கெர்ப்பிணி வயிறு கிழிந்தால்.

ஏலம், லவுங்கம், மதுரம், மாங்கொட்டை, அதிவிடயம், இலவங்கொழுந்து மாதளம் பழ விரை கூட்டி அரைத்து மேதித் தயிரில் கொடுக்க தீரும்.

கக்குவானுக்கு.

கையான் தகரை நாயுருவி கருந்தக்காளி நெச்சி இலை
மெய்யா யெரிக்கின் மலரிரண்டு வேலி பருத்தி இலை நாலு
நொய்யா முரிக்கிருடன் கூட்டி நுனறங்க வரைத்து அடை சுட்டு
கையாலெடுத்து தின்பீரால் கக்குவா நோய் தீர்ந்து விடுமே.

எலி கடிக்கு.

1. முன்ன வேர் பழத்தளவு அரைத்து பசும் பாலில் அருந்த தீரும்.

2. தும்ப இலை அரைத்து குருவரிசி மாவில் கலந்து எருக்கன் காயுள் அடைத்து கொழுக்கட்டை போல் சுட்டு தின்ன தீரும்.

இருமலுக்கு.

கொடிவேலி வேரும் மொக்க கொட்டையும், அவித்தருந்த தீரும்.

கண்ணரிக்கு

நந்தியா வெட்டை வேர் பாலில் அவித் உலர்த்தி கண்ணிலிழைத்திட பழம பூவானி

ஊறமில்லாமலிருந்தால்.

ஆண் பனை இலையை சுட்டு பாலில் அருந்த ஊறங்கானறும்.

கை கால் குறைந்த குஷ்டத்திற்கு.

கிரிஞ்சின் கிழங்கை சிறு அரிந்து உலர்த்தி இதில் சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, இட்டு இடித்து துவட்டி வடித்து சுண்டைக்காயளவு ரு மண்டலமும், களாக்காயளவு ரு மண்டலமும் சாப்பிடவும் பத்தியம் முருங்கை பிஞ்சு, முருங்கை இலை, துவரைப்பருப்பு, பசும்பால், பசும் பால், நெய்வார்த்தன்னவும். பாகற்காய், கிரந்தி பண்டம் ஆகா.

சர்வ நோய்க்கும்.

உரித்து முளை நீக்கிய வெள்ளுள்ளி பலம் 100 கழுவி உலர்த்திய கூரெள் பலம் 50 இதில் 2 படி பசும் மோர் விட்டு கொடக் கல்லில் ஆட்டி அதில் திகடுகு, கடுக்காய், தான்றிக் காய், நெல்லி பருப்பு, வாய் விளங்கம், ஓமம், குரோசாணி, கருஞ்சீரகம், நற்சீரகம், கஜகஜா, இந்துப்பு, வெடிஉப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, இஞ்சி வகைக்கு வீ 5 இவை பொடித்து தேன், நல்ல வெல்லம், சர்க்கரை வகைக்கு வீ 5, இதுகளை முன் மருந்துடன் கூட்டி ஆட்டி வில்லை செய்து உலர்த்தி கலசத்திட்டு இரு நேரம் வெருக்கடி அளவு கொள்ள தீரும் வியாதி மடிவாதம், பஞ்ச குன்மம், அந்தர வாதம், அண்டவாதம்,

சூசிகா வாய்வு, சூசி கிராணி, உதிர ரோகம், பாண்டு ரோகம், சுவாச பாண்டு ரோகம், குன்ம பாண்டு ரோகம், சூசாலை, காமாலை, ருத்திர ரோகம், விஷக்கடி இவை தீர்ந்து புத்திலிருண்டாம். மண்டலம் ஒன்று.

வயிற்றிலுள்ள விப்புருதிக்கு.

குமிழ், பாவட்டை, கொடி வேலி, சிறுகுறிஞ்சான் இவைகளின் வேரின் பட்டை எருமைப் மாட்டு பாலில் அரைத்து கரைத்து தினயரிசியுடன் சமையல் செய்து தின்னத் தகுந்ததை சாப்பிட இதற்கு இருமல், ஒடுவிப்புருதி, வெப்பு பாவை, நீராமை பெருவயிறு, மற்றும் வயிற்றிலுள்ள நோயை தீர்க்கும்.

தாக சுரத்திற்கு.

தூய்ய சீந்தி பற்படாகம் துலங்கு மதுரம் சர்க்கரையும்
நைய தகர்த்து வதை அரைத்து நந் மிள நீர் அதிற் கலந்து
மையப் பயிலும் விழியாளே மகிழ்ந்தே உண்ண வல்லீராய்
பைய தாகச் சுர மெல்லாம் பாரா தோடுங் கண்டீரே.

மண்டூர வடகம்.

வல்லத் தசியம் அன்றேல் அலவா மலைக்கியம் அல்லதுறா வருஷ கியம் பொடித்து பலம் 5, அயப் பொடி பலம் 5, திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, வகைக்கு பலம் 5, இவைகளை பொடித்து கருதாரை சாற்றில் அரைத்து பின் பழரசத்தில் அரைத்து கழர்க்காய் அளவு குளிகை செய்து 1 படி நல்லெண்ணெயில் ஊர விட்டு காலை மாலை 10 நாள் சாப்பிடவும் விட்டு பின் 10 நாள் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

சுரக் கஷாயம்.

நெற் பொரியும் சர்க்கரை பால் வில்வ வேரும்
நெருங்கிய சீரகம் ஏலம் சுக்கு நெல்லி
முற்படி இளநீருடனே காய்ச்சிஒன்றாய் முத்திய பின்
இறக்கி அந்த கஷாயங் கொள்ள செப்பரிய உழலை சத்தி வெதுப்பழர்ச்சி சிதார்த்த தாக மெல்லாம் தீருந்தானே.

விக்கல் கழிச்சல்.

மதுரம், லவுங்கம், லவுங்கப் பட்டை, பேரீச்சம் பழம் முந்திரிப் பழம், நற்சீரகம், கருஞ்சீரகம், வெளாவரிசி, பழம் புளி, சர்க்கரை சமன் பொடித்து நெய் விழுதில் கரு எலுமிச்சங் காயளவு குழைத்தருந்த தாகம், கழிச்சல் தீரும்.

மூல ரோகத்திற்கு கந்தாதி லேகியம்.

காட்டு கருணைக் கிழங்கு பலம் 46, சில்லாதி பலம் 8, சுக்கு பலம் 4, செவியம் பலம் 3, நாகப்பூ, மிளகு, சீரகம், வாய்விளங்கம், வகைக்கு பலம் 1, செவியம் பலம் 3, நாகப்பூ, நவாச்சாரம், எவச்சாரம், சத்திச் சாரம் வெங்காரம், படிக்காரம் க்ரயம் வகைக்கு பலம் 5, திப்பிலி பலம் 1, சித்திர மூலம் பலம் 21, இவைகளை பொடித்து சமன் பனை வெல்லம் இட்டுஇடித்து தான்றிக்காயளவு கொள்ள 8 வகை மூலம், 4 வகை கிராணி, 18 குட்டம், 20 வகை மேகம், பஞ்ச குன்மம், அஸ்திய பற்றிய போர்கா சூலைகள் சுவாச இருமல் கிருமிகள் உதிர ரோகம் பாண்டு ரோகம், மகோதரம், சவோதரம், ஆராப் புண்கள் தீரும்.

இதை தான்றிக்காயளவு உருண்டையாய் செய்துக் கொள்ளவும்.

சுவாச காசத்திற்கு.

கடுக்காய், காசுகட்டி, சுக்கு வகைக்கு பலம் 1, திப்பிலி, தட்டிடை 1 மிளகு படி கடுகு ரோகணி களஞ்சி 4 இந்துப்பு களஞ்சி 4 சீரகம், படி வெளிச்சபின் களஞ்சி 6, வசம்பு களஞ்சி 7 இவைகளை பசு நெய்யில் பொரித்து பொடித்து இந்துப்பு களஞ்சி 4 பொடித்து கல்ந்து தட்டிடை நேரம் 1-க்கு கொள்ளத் தீரும்.

காச ரோகத்திற்கு.

கையான், உப்பிலி, நொச்சி, ஆடாதோடை, ஆமணக்கு இவைகளை இடித்து வகைக்கு சார் படி 1 மண் பாத்திரத்திட்டு பொடித்த கஷாயம் படி 1 மேற்கண்ட சாற்றிலிட்டு கிளரி உலர்த்தி புளியங் கொட்டையளவு கொள்ள மல பந்தம், சோவை, காமாலை, குன்மம், காசம் தீரும்.

மலபந்தத்திற்கு சுக பேதி சூரணம்.

காயம் 1, வசம்பு 2, சித்திர மூலம் 3, சுக்கு 4, ஓமம், 5, கடுக்காய் 6, திப்பிலி 7, கோஷ்டம் 8 சிவைதை 9 இதை சூரணம் செய்து கொள்ளவும். சேத்து மத்துக்கு தேன் பித்தத்திற்கு பச்சரிசி கழுநீர், வாத சரீரத்திற்கு வென்னீர் இவ்விதம் சரீரமறிந்து கொடுக்க மலமந்தம் தீர்ந்து சௌக்கியமடையும். சிவிதை பாலில் சுத்தி செய்யவும்.

சூலைக்கு.

பாவட்டை இலையை சாடியில் இடித்து பிழிந்து 7 நாள் கொடுக்க தீரும்.

2. நிலக்கடம்பை சாரும் நல்லெண்ணெயும் சூலை சமன் சாரித்து 9 நாள் அருந்த தீரும். இப்படி விட்டு 3 தடவை சாப்பிட சூலை கிரந்தி, கை கால் முடக்கு தீரும், பத்தியம் உப்பு, புளி கிரந்தி பதார்த்தம் கடுகு நீக்கவும்.

இருமலுக்கு புட்டு.

சிறுகாஞ் சொரி, நிலக்கடம்பு, தூதுவளை முருக்கு இவை இலை சமன் பிடி 1 கம்பரிசி கூட்டி அரைத்து புட்டுச் சுட்டு காலமே தின்று நீர் குடியாமலிருக்க தீரும்.

மூலத்திற்கு சூரணம்.

இந்துப்பு விராகன் 1, இசைந்த சீரகமே இரண்டு முன்றற்ற ஓமம் மூன்று முதிர்ந்த திப்பிலியே நாலு வந்துற்ற சுக்கு வைந்து வருந்தி நீ இம்மருந்தை கொந்துற்ற கடுக்காய் தானும் கொள்வது சரியதாக கூட்டி நீ தேனிலுண்ண மெள்ளவே மலங் கழிந்து மிருந்திடும் தீவினங்கள் தள்ளிய சூலை குன்மம் தொலைந்திடும் மூல ரோகம், கள்ளவிழ குழலினுளே கருதியே செய்குவீரோ.

புராண சுரத்திற்கு.

லவங்கம் வீ 1, தேவதாரம் வீ 2, ஏலம் வீ 4, மிளகு வீ 8, திப்பிலி வீ 16 சுக்கு வீ 32, அமுக்கரா வீ 64 இவை பொடித்து சமன் சீனி கலந்து வெருக்கடி யளவு தின்ன அஸ்தி சுரம், மாத சுரம், வருஷ சுரம், காசம், தீர்ந்து அநுபானமறிந்து கொடுக்க தேகம் தழைக்கும்.

பித்த கஷாயம்.

முத்தக் காசு பேப்புடலும் முதிரும் வேலி முசுமுசுக்கை
மற்றும் பற்படாகம் வெட்டி வேரும் சுக்கு சமன் கூட்டி
நித்தமிதனை எட்டிலொன்றாய் நேராய் காய்ச்சி கொள்விரால்
பித்த சுரங்கள் விட்டோடும் பெரியோர் உரைத்தசிக்கு கஷாயமிதே.

வாய்வுகளுக்கு குளிகை.

திரிகடுகு, வெள்ளுள்ளி, ஓமம், நொச்சி கொழுந்து, பிரண்டை வேம்பு சாரணை இவை கொழுந்து வகைக்கு பலம் 1, ஆயில கொழுந்து பலம் ஸ்ரீ இதுகளை மை போல் அரைத்து ஒருவள்ள எருமை மோரில் கலக்கி மெழுகு பதமாய் காய்ச்சி களாக்காயளவு உருட்டி உலர்த்தி காலை மாலை சாப்பிட அஜீரணமும், வாய்வு, அக்கினி மந்தம், பித்தம் தீர்ந்து பசியுண்டாமே.

பித்தத்திற்கு வெண்பா.

பாரிசைந்த நெல்லி முள்ளி, பாரியதோர் கூவிளையும், சீரிசைந்த தோர் சுக்கு, சீரகமும், பேரிசைந்த சித்த முட்டி நெற் பொரியும் சேரக் கஷாயமிதில் பித்தமெலாம் போமே பிரிந்து.

பிரசவவயிற்றில் சீழ் கட்டினால்.

கன்னி சருகில் 2 படி நீர் விட்டு எட்டிலொன்ருய் சுண்டக் காய்சி நெய் கூட்டிக் கொடுக்கவும், 2-வது ஈச்சம் சோறு கொடுக்கவும்.

வயிறு கழிச்சலுக்கு.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, நற்சீரகம், கஞ்சா பொடி சற்று கூட்டி தயிரில் கொடுக்கவும் இத்துடன் அபின் பணவிடை 1, சுன்னம் கடலையளவு மத்தன் சாறு 1 துளி கூட்டி சாரித்து கொள்ள தீரும்.

அக்கினி மந்தத்திற்கு.

கருவேப்பிலை பலம் 1, திப்பிலி பலம் கரு, மிளகு பலம் க, சுக்கு பலம் உரு, இந்துப்பு பலம் ங, இவை வறுத்து இடித்து போஜனத்திட்டு நெய் விட்டு சாப்பிடவும்.

பெரும் பாயிற்கு.

ஈருள்ளி ரசம், பழரசம் சாரித்து 2 நேரமும் 3 நாளருந்த தீரும்.

சூலைக்கு சூரணம்.

பிரங்கி பட்டை பலம் 5, செங்கத்தாரி வேர் பட்டை, சங்கம் வேர் பட்டை, ஆயில் பட்டை வேப்பம் பட்டை, வேப்பீர்க்கு, மிளகு கரணை பட்டை, வகைக்கு பலம் 2, திரிகடுகு, திப்பிலி மூலம், செவியம்; ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, வகைக்கு பலம் கரு தேங்காய் க, சர்க்கரை பலம் அ, வெள்ளுள்ளி பலம் ச, பசும்பால் படி க, தில நெய் படி க, வாழைப்பச் சார் பிடி ரு, ஆவரைவணங்கிச் சார் படி ரு முன் சரக்குகளை பாலில் அரைத்து கரைந்து காய்ச்சி கற்கத்தோடு சாப்பிட்டு வர சர்வ சூலை கை மொடக்கு, கால் மொடக்கு, புண்களும் தீரும். இச்சா பத்தியம்.

வெக்காச்சல் ஆரா சுரத்துக்கு.

சுண்டைக் கோல், தும்பைக் கோல், கீரிக் கோல், மணிதக்காளிக் கோல், வகைக்கு பிடி கரு, பன்ன வேர் பிடி ங, இவைகளை வென்னீர் விட்டு இடித்து கொடுக்கத் தீரும். பத்தியம் வென்னிரும் சாதமும்.

சத்தி குன்மத்துக்கு.

நார்த்தம் பழச் சார் வள்ளம் 1 சிற்றாமணக்கெண் சார் படி 2, தோல் முளை நீக்கிய வெள்ளுள்ளி அரைத்தது பெரிய பலம் கரு கல்லு படி ரு பொடித்து இவைகளை கூட்டி காய்ச்சி பதத்திலெடுத்து காலை மாலை சாப்பிட சத்தி குன்மம் பஞ்ச குன்மம் அக்கினி மந்தம் தீரும்.

படை சூரணம்.

பரங்கி பட்டை பெரிய பலம்அ, சுத்தி செய்த நெ.இகந்தி மேற்கண்ட படி ககா சித்திர மூலம் மேற்கண்ட பலம் 2 பொடித்து வடித்த ஆகூபிரத்தில் பிசைந்து மண் பாத்திரத்தில் பாலும் சலமும் இட்டு மேல் வேடு கட்டி சூரணத்தை வேட்டின் மேல் வைத்து மேல் மூடி ஆவி எழ யெரித்து எடுத்து உலர்த்தி பொடித்து நெய்*மோர் காசிடை இரு நேரம் கொள்ள பத்தியம் துவரைப் பருப்பு, பாசி பயறு, பால், நெய், மோர் உப்பு மிளகு சீரகம், சேர்த்து ரு புளி கூட்டவும். வெடி மேகம் 18, சூதகபடி, சட்டை சூலை, ஆடக்கு கிரந்தி பத்திரம் 11 நாளருந்த இடுப்பு வலி, பக்கவலி, நெஞ்சு வலி, சூதக வாய்வு இவைகளும். தீரும். மேற்கண்ட சூரணத்துக்கு சமன் சீனி சேர்த்து கலந்து முன் மாதிரி 11-11 நாளாக 2, 3 தடவை சாப்பிடலாம்.

காக்கை வலிப்புக்கு.

கற்பூரம் குன்றிடை 1, காயம் குன்றிடை 2, விளாம்பிசின் கூட்டி சாராயமிட்டு அரைத்து 30 குளிகை செய்து 10 நாள் சாப்பிட தீரும்.

இருமலுக்கு.

வெள்ள மிளகு பலம் 1, வெங்காரம், மதுரம், வகைக்கு பலம் க, கன்னி ரசத்திதல்

அரைத்து மிளகு போல் உருண்டை செய்து காலை ஒன்று மாலை ஒரு குளிகையாக வாயில் அடக்கவும்.

இருமலுக்கு.

போதமான மஞ்சள், கடுக்காய், சுத்தி செய்த காடியில் 3 நாள் ஊறி உலர்த்தி யதில் 3 நாள் ஊறி உலர்த்தி பொடித்து வடித்தது பலம் 4 இந்துப்பு பலம் க, பழரசம் விட்டரைத்து சுண்டைக் காயளவு உருண்டை செய்து வாயில் க குளிகை அடக்க இருமல் நீங்கி மலம் விடும்.

தோசவலுவிற்கு.

முத்தின தேங்காய் கண் திறந்து நீரை நீக்கி விட்டு இதனுள் முழுங்க விரை 40 முருங்கை பிஞ்சு நறுக்கி த்ாள் செய்தது பிடி 1 கஞ்சா இலை பிடி 1, அபின் கழற்காய காயளவு, சாதிக்காய், 1, சாதிபத்திரி, சேரை 1, குரோசானி, ஓமம், சேரை 1 சமித்திரா சோகி விரை 2 லிங்கம் பிடி 1, இதுகளை சிதைத்து போட்டு மூளையடித்து சானி தப்பி சுடுகையில் வெடித்த பின் எடுத்து மருந்தை சாராயம் விட்டரைத்து கழற் காய் அளவு குளிகை செய்து தேங்காய்களை உலர்த்தி வைத்துக் கொள்ளவும். வேண்டிய போது ஒரு குளிகை சாப்பிட்டு தேங்காய் கொஞ்சம் தின்று புளி விடவும்.

மாதர் மயக்கில் மருந்தீடில் வந்தே இருமல் புலால் நாரும்
சேதமிகவே பயித்தியமும் செரிய தெரித்தே யேப்பமிடும்
வாத மிகவே கடி விஷமும் வருந்து மீளா இருமல் தாய்
நீதிப் புயில் சேர் சிரத்தில் மிக நின்றே மயங்கி கொன்றிடும்.

இதற்கு மருந்து:- வெள்ளுள்ளி பருப்பு பிடி 1, அரைத்து நல்லெண்ணை படி ரு யில் கலந்து வெதுப்பி பிழிந்து வடித்து 3 நாள் சாப்பிட மருந்திடு பையோடு விழும்.

மண்டை குலை பீனிசத்திற்கு.

சித்தாமுட்டி, சமூலம் பலம் 12, கண்டங்கத்தரி சமூலம் பலம் 12, நத்தை சாரணை பலம் 5, இவை இடித்து மண் பாடத்திட்டு குருனி சலம் விட்டு எரித்து நாழியாக வடித்து இதில் மேனி ரசம் படி 1 தில யெண்ணை படி 1 விட்டு இதில் அரத்தை, தேவதாரம், ஏலம், லவுங்கம், வகைக்கு பலம் ரு, பொடித்து யெண்ணையில் கலக்கிமெழுகு பதமாய் எரித்தெடுத்து முழுக மண்டை குலை, கண் வியாதி, அழலை, நாற்றம், பீனிசம், தீரும்.

சர்வ வாயுவுகளுக்கும், வடவாக்கினி சூரணம்.

ஞாயிற்று கிழமை முத்தினமா பிரண்டையை இடித்து வெய்யிலில் வைத்து பொடித்து வடித்தது படி க, ஓமம் படி க, கல்லுப்பு படி ரு, மிளகு பலம் கரு, வெள்ளுள்ளி பலம் க, கடுகு பலம் வ, பொட்டுலுப்பு, இந்துப்பு வளையலுப்பு, வகைக்கு வீசம் கரு கடை சரக்குகளை இடித்து வடித்து உப்புகளை தனியாய் இடித்து பெருங்காயம் விராகனிடை 1 உப்பும் பிரன் டையும் நீக்கி மற்ற தெல்லாம் வறுத்து பொடித்து சூரணங்கள் யெல்லாம் ஒன்றாய் கலந்து பனை வெல்லம் சமன் சேர்த்து வெருக்கடி பிரமாணம் கொள்ள தீரும் வியாதி நெடு நாள் தீராத வியாதியான வாய்வு, உடம்பு வலி, சயித்தியம் தீரும். பசியுண்டாம்.

சர்வ சுரத்திற்கும் உலர்ந்த தேக உஷ்ணத்திற்கும்.

ஓமம் பலம் க, சீரகம் பலம் க, வெந்தியம், அதிமதுரம், கடுக்காய் வகைக்கு பலம் ரு, ஏலம், இந்துப்பு வகைக்கு பலம் வ, இவை வறுத்து பொடித்து வடித்து சக்கரை பலம் 4 கூட்டி கலந்து வெருக்கடி பிரமாணம் காலை, மாலை மண்டலம் கொள்ள அசீரண வாய்வு உஷ்ணங்களும் தீரும்.

உள் காச்சலுக்கு.

சீரகம், சர்க்கரை, சத்தி சாரணை 3-யையும் அரைத்து பசும் பாலில் கரைத்து 40 நாள் கொள்ள உட் காச்சல் தீரும்.

வாய்வுக்கு சித்திர மூல சூரணம் பெரண்டை.

சித்திர மூல வேர் பட்டை, புளியரணை கிழங்கு, மலமஞ்சிக் கிழங்கு, காட்டு கருணை

கிழங்கு, திரிகடுகு, இவைகள் சமம் பொடித்து வடித்த சூரணம் 8 பங்கும் கடுக்காய் சூரணம் 10 பங்கும் கூட்டி திரிகடி சூரணம் தேனிலாவது வென்னீரிலாவது கொள்ள சர்வ வாய்வு, சர்வ ஜன்னி, அக்கினி மந்தம், தீரும். பசியுண்டாம். பசுவின் பால், நெய் கூட்டவும்.

குழந்தைகளுக்கு பேதி மருந்து.

வேலிபருத்தி, கொழுந்து பாகல் கொழுந்து, திரிகடுகு, வசம்பு, ஓமம், இவைகள் வகைக்கு வீ 4 வறுத்து இள வென்னீரில் அரைத்து சுண்டக்காயளவு உருண்டை செய்து நிழலுலர்த்தி இள வென்னீரில் கொடுக்க பேதியாம். முலைப் பாலில் கொடுக்க நிற்கும்.

சுரத்தின் மேல் வயிறு கழிந்தால்.

வெளாம்பிசின் பொடித்து படி வ, வெள்ள குங்கிலியம், பொடித்தது படி வ, நற்சீரகம் பொடித்தது படி வ, அதி விடயம் களஞ்சி 4, சுக்கு, சேர் 1 இவைகள் பொடித்து தேனில் வெருகடி கொள்ள தீரும்.

சகல கிராணிக்கும் மருந்து.

முத்தக் காசு, விராகனிடை 2, புங்க வித்து விராகனிடை 2 மோரில் அரைத்து கலக்கி அடுப்பில் வைத்து ஒரு கொதி இட்டு இறக்கி கொடுக்க கிராணி தீரும்.

சன்னி 18-க்கும் எண்ணை.

கொடி வேலி வேர் பட்டை பலம் 10, வெள்ளுள்ளி பலம் 25, வசம்பு விராகனிடை 2 இவைகளை பச்சையுடன் அரைத்து தில யெண்ணை படி 1-ல் கலக்கி அடுப்பேற்றி மந்தாக்கினியாய் எரித்து மெழுகு பதத்தில் இறக்கி சுமார் ஒரு சொட்டிடை கொடுத்து உடம்பு வலிக்கும், நரம்பு வலிக்கும், லேபனம் பண்ண சகல சன்னியும் தீரும்.

கிருமிக்கு.

புங்கு வித்து5, இள வென்னீரில் அரைத்து கலக்கியுண்ண கிருமி நீங்கும்.

புண்ணுக்கு.

வெள்ளை துருசு, லகு சுன்னம், வரப்புவா ரசத்திலிரைத்து மேற்கண்ட ரசத்தில் குழைத்திட புண்தீரும்.

எலிக்கடிக்கு.

ஊரவைத்த புழுங்கலரிசியில், நொச்சி துளிரின் பிடி 1, பொடுதலை பிடி 1, மூன்றையும் அரைத்து ரொட்டி சுட்டு தில நெய்யில் தொட்டு தின்ன தீரும்.

மாரல் சுரத்திற்கு.

உகாவேர் பட்டை வென்னீரிலரைத்து சாப்பிட்டு சர்வாங்கந் தலைவளையிட தீரும்.

இருமலுக்கு.

காஞ்சோரி, நிலக்கடம்பிலை, தூதுவளையிலை, முருக்கிலை சமன் கம்பரிசியிட்டு அரைத்து பிட்டு சுட்டருந்தி நீரருந்த தீரும்.

உதட்டு புழுவுக்கு.

சிறுபூளை வேர், மணத்தக்காளி வேர், கசு கட்டி, மூன்றையும் சுத்தியிலரைத்து புண்ணிலிட்டு சாய்ந்து படுக்க புழு கழிந்து புண்ணாறும்.

மூலத்துக்கு.

கருங்குருவை அரிசி, செம்பளியிரளை கிழங்கு, போட்டி இடித்து பிட்டு சுட்டு நல்லெண்ணை, நல்வெல்லங் கூட்டிக் காலமே தின்று ராத்திரிக்கு பாலுஞ் சோறும் வெல்லமுஞ் சாப்பிட பத்தியம் உப்பு, புளி மிளகாய், நெய், தயிர், பாக்கு, வெத்திலை, முதலானது 1 மாதம் விடவும். இதற்கு மூலம் உள்மூலம், புறமூலம், ஆசனமூலம் இரத்த மூலம் தீரும்.

வண்டு கடிக்கு.

சொரிந்த எருக்கம் பால் தடவி கருலத்தி புளிய நெருப்பில் புகை காட்ட தீரும்.

2. மேற்கண்ட பாலும் வெள்ளுள்ளியும் அரைத்து பூச தீரும்.

காதில் சீழ்க்கு.

கெந்தி, மஞ்சள், உள்ளி வலம்புரிக்காய் வகைக்கு விராகனிடை 1, அரைப்படி தில எண்ணையில் எரித்து செவியிலிட தீரும்.

2. பூச்சாம்பழம், வெள்ளுள்ளி வசம்பு தில எண்ணையில் எரித்து காதிலிட தீரும்.

நரம்பு சிலந்திக்கு.

விடத் தேர், இலையை பறிந்து நீர் விடாது அரைத்து வருத்து தத்தின விளக்கெண்ணையில் மத்தித்து விழுங்கவம். புழுங்கலரிசி கஞ்சி முன் கொடுத்து பின்னு வெந்நீர் அன்னம் உண்ணவும். இப்படி 3 முறை தின்ன குணமாம்.

வேறு.

காடவரை இலையை அரிசியில் இடித்து களி செய்து தில எண்ணையும் பனை வெல்லமும் 3 நாள் கொள்ளகுணமாம்.

நீர்க் கட்டுக்கு.

சிருபூளை வேரும், இலையும், தேங்காயளவ நற்சீரகம் போட்டு ஆவின் பால் விட்டிடித்து பிழிந்து வடி கட்டி குடிக்க ஜலம் விழும்.

கெர்ப்ப ஸ்திரிக்கு விக்கம் தீண்டிதல்.

ஒருகளஞ்சு ஏலம் அரைத்து இளவெந்நீரில் கொடுக்க விக்கம் தீரும்.

விப்புருதிக்கு

வரிக் குருமத்தை இலை, கொழுந்தை வேண்டியதை யெடுத்து உலர்த்தி பொடித்து பேச்சுரக் குடுக்கையிலடைத்து வேண்டியவர்க்கு வெந்நீரில் கொடுக்க விப்பருதி உடையும்.

சீத கடுப்பு, இரத்த கடுப்பு.

புனல் முருங்கை பிசினை உலர்த்தி பொடித்து இள வருவல் செய்து வெருக்கடி நாள் வடி கட்டின தயிரில் குழப்பி கொள்ள தீரும்.

சீத கடுப்புக்கு.

சீரகத்தில் வெண்ணை போட்டு வறுத்து பொடித்து சர்க்கரையில் கலந்து சாதித்து கொள்ள எக் கழிச்சலும் மாறும்.

ஓடுவிப்புருதி, கட்டு விப்புருத்தி, சந்து விப்புருதிக்கு.

கவிழ் தும்ப இலையை இடித்து வெள்ளாட்டு பாலிலாவது, பசுவின் பாலிலாவது விட்டு பிசைந்து வடி கட்டி 3 நாள் கொடுக்கவும், மேல் பூச்சு இதற்கு இம்மருந்தும், கல்லுப்பும் அரைத்து வீக்கத்தின் மேல் தடவ எவ்வகைப்பட்ட வீக்கமும கரையும்.

சகல விஷ கடிக்கும், வண்டு கடிக்கும்.

பங்கம் பாளை, இளநீர் அளவு கல்லுப்பு படி ரெ, வெள்ளாட்டு கோமியம் படி 3 இதுகளை மண் பாத்திரத்திட்டு குழியில் வெள்ளாட்டெரு விட்டு பாத்திரத்தை மூடி அதில் வைத்து யெரிக்கிறது நாயமாம். இதை பொடித்து வடித்து தினம்1-க்கு விராகனிடை 1 தின்னவும். விளக்கெண்ணையில் கலந்து புண்ணுக்குத் தடவவும். சகல குன்னியும் தீரும்.

அஷ்ட பீனிசத்திற்கும், தலைவலிக்கும் நாசி புகை திரி.

இங்கிலிங்கம் அ விராகன்னிடை எலுமிச்சம் பழ சார் விட்டு அரைத்து வெள்ள துணியில் தடவி நிழலிலுலர்த்தி திரி செய்து பத்த வைத்து புகை பிடிக்கவும்.

வேறு.

திரிகடுகு தாரம், அருசு, பாஷாணம், குங்கிலியம், கெந்தி, மஞ்சல், இவை பொடித்து சீலையில் ஆட்டி திரியாக்கி புகை பிடிக்கவும். எந்த தலைவலியும் தீரும்.

இடுப்பு வலிக்கு.

ரு படி கம்பை இடித்த வட்டதத்திப் பட்டை மாங்காயளவு அரைத்து கலந்து களி கிண்டி நெய்யாவது எண்ணெயாவது கூட்டி வெல்லம் போட்டு தின்ன வாதத்தில் பிறந்த இடுப்பு வலி தீரும். இவ்விதம் 9 நாள் புளி நீக்கவும்.

விந்து கட்டுக்கு.

கட்டுக் கொடி தழையை ஒரு பானையிலிட்டு அதற்கு மெதந்து 8 படி சலத்திற்கு குறையாமலிட்டு ஒரு படியாக்கி 3 நாள் சாப்பிட கட்டும்.

ராதாகிருஷ்ண பிச்சு முறை.

மிளகு, ஏலம், பலம் 1 சமமாய் எடுத்துக் கொண்டு ½ படி நல்லெண்ணெயில் போட்டு அதை புகை எழும்பும் வரையில் காய்ச்சி தாம்பிரத்தில் போட்டு அதை வேடு கட்டி வெய்யிலில் வைத்து ஒரு வாரமான பிறகு தினமும் கொஞ்சம் தலையில் தடவி வருவதுடன் 4 நாளுக்கு ஒரு முறை ஸ்நானமும் செய்ய சிவநேத்ர ரோகங்களும், மண்டை ரோகங்களும் தீரும்.

கெட்டுப் போன தேங்காய் எண்ணெய் துர்நாற்றம் போக்க எண்ணெயை நன்றாக காயவைத்து ஒரு பாத்திரத்தில் மேற்கண்ட எண்ணெயை. மக்கரியும் கலந்து 24 மணி நேரம் வைத்து விடவும். பிறகு அந்த எண்ணெயை எடுத்து சற்று சுட வைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

தேள் கடி மருந்து.

1. வெள்ளாட்டுப் புளிக்கையை தண்ணீர் விட்டரைத்து கடித்த இடத்தில் தடவ தீரும்.
2. புளியங் கொட்டை உள் பருப்பை எடுத்துக் கொண்டு தண்ணீர் விட்டரைத்து கடித்த இடத்தில் போட தீரும்.
3. கடித்த இடத்தை கொஞ்சம் கீறி விட்டு அந்த இடத்தில் 4 அல்லது 3 துளிகள் குளோரால். காம்பர் தடவ வலி உடனே நிற்கும். இது கை கண்ட ஔஷதம்.
4. . சுயம் லிக்கர், அமோனியா கோழி இறகில் எடுத்து தடவ.
5.

முகப்பீர்க்கு மருந்து.

. அ 1 அவுன்ஸ் கந்தகத்தை பொடி செய்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் ஒரு மம்பளர் ஜலத்தை விட்டு 12 மணி நேரம் அப்படியே வைத்திருந்து பின்பு அந்த ஜலத்தை 2, 3 தரம் முகத்தில் தடவவும்..

வாழைச் சருகை கொளுத்தி அந்த சாம்பலை எடுத்துக் கொண்டு உப்புக்கு பதிலாக உபயோகிக்கலாம்.

வாழைக்காய் நன்றாக முத்தின காயாக எடுத்துக. கொண்டு மேல் தோலை சீவி விட்டு காயை. சிறு பில்லைக்களாக அறுத்து வெயிலில் உலர்த்தி காய்ந்தவுடன் நன்றாக தூள் செய்து வைத்துக் கொள்ளவும். இந்த மாவைக் கொண்டு குழந்தைகளுக்கும் பலஹீனர்களுக்கும் கஞ்சி செய்து கொடுக்கலாம்..

வாய் ஈரல்களில் ரத்தம் வடிகிறதற்கு கொஞ்சம் எலுமிச்சம் பழம் ரசத்தில் கொஞ்சம் கல்கண்டு சேர்த்து கொப்பளித்தால் நிற்கும்.

ஒரு சீசாவில் சாதாரண உப்பு போட்டு நடுவில் நடுவில் எலுமிச்சம் பழம் புதைத்து வைக்கவும். 15-20 நாள் ஆன பிறகு அந்த உப்பை எடுத்து விட்டு வேறு உப்பு போட்டு வைக்கவும். இம்மாதிரி 4, 5 தடவை செய்த பிறகு அந்தப் பழங்களை உபயோகித்தால் வெகு குணங்கள் தெரியும். இதற்கு ஜாக்லேபு என்று பெயர்.

கிரோசின் ஆயில் நாற்றம் நீக்க.

9 லியர் கிரசின் எண்ணெயில் 200 கிரெயின் க்ளோரினேடட்லம் சேர்த்து நன்றாய் கலக்கி பிறகு கொஞ்சம் ஹைடரோகுளோரிக் ஆசிட் சேர்த்து மற்றொரு பாத்திரத்தில் கொஞ்சம் சுண்ணாம்பு போட்டு இந்த எண்ணெயை அதில் ஊற்றி நன்றாக கலக்கினால், குளோரின் போய் விடுகிறது. எண்ணெயை வடிகட்டிக் கொள்ள. நாற்றம் இருக்காது.

சொரி சிறங்குகளுக்கு.

கார்பாலிக் ஆஸிட் 3 மினிம்ஸ் (இது ஒரு அளவு), கர்ப்பூரம் 5 கிரெயின்ஸ், இலுலப் டஸ்ஆயில் 5 மினிமஸ், சுயகுரு எண்ணெ 10 அவுன்சு, அலபாஸ்டிரின் 10 கிரெயின்ஸ் இவைகள் ஒன்று சேர்த்து கலக்கி ஸ்நானத்துக்கு அரைமணி நேரத்துக்கு முந்தி தேய்த்துக் கொள்ளவும். (இம்மருந்து பாஷான சம்பந்தமானதால் ஜாக்கிரதையாக இருக்கவும்).

தத்த நாக தகடு தயார் செய்ய.

இரும்பை ஸல்பரிச் ஆஸிட்டில் வைத்து எடுத்துக் கொண்டு மெர்குரி குளோரைட் திரவாகத்தில் போட்டு காய்ச்சி பிறகு நன்றாக உருக்கிய தத்தநாகத்தில் 3 நிமிஷம் வைத்து எடுத்துக் கொள்ளவும். இது முதல் தரமான முறை

கடி மருந்து.

தைமல் 8 கிரெயின் கிரைசோபானிக் ஆஸிட் 2 டிராம், கந்தகம் 3 டிராம், போரிக் ஆஸிட் 2 அவுன்சு, ஜிங்கு ஆக்ஸைட் 1 டிராம், சலிசிலிக் ஆஸிட் 1 டிராம், வாசிலின் ஆல்பா 20 அவுன்சு இவைகளை கண்ணாடி மேல் போட்டு கத்தியால் கலந்து டப்பிகளில் எடுத்து வைத்துக் கொள்ளவும். கடியிருக்கும் இடத்தை நன்றாய் கழுவி சுத்தி செய்து 2 நாள் தடவவும், எப்பேர்பட்ட கடியும் நிவர்த்தியாம்.

இமிடேஷன் பட்டு.

சணல் நாரைக் கொண்டு வந்து கிளிஸிரைனில் ஊற வைத்து பிறகு நல்ல ஜலத்தில் கழுவி சோடியம் பொராகஸைட் உடன் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும், இது பட்டைப் போல் கெட்டியாகவும் பளபளப்பாகவும் இருக்கும். இது ஒரு ஜெர்மன் முறை.

கற்பூரம்.

வைப்பு:- டர்பென்டைன் திரவாகத்தில் அயிட்ரோ குளோரிக் ஆஸிட் புகை செலுத்தி எண்ணெ பாத்திரத்துடன் குளிர்ச்சி செய்ய உப்பும் பனிக் கட்டியும், சேர்த்து பாத்திரத்தில் வைத்து குளிர்ச்சி செய்ய வெண்மிரமான ~~கற்~~ ~~கற்க~~* கட்டிகள் அடியில் நிற்கும். அவைகளை உலர்த்தி ஆல்கோஹால் விட்டு சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும்.

மற்றொரு முறை:- டர்பென்டைனும் ஆன்ஹைடிரஸ் ஆக்ஸாலிக் ஆஸிட் சம மந்தித்தால் கற்பூரம் கிடைக்கும். டர்பென்டைன் எடைக்கு கால்பாகம் கற்பூரம் கிடைக்கும்.

காலரா.

ஆரம்பத்தில் கற்ப்பூரம், சுத்த ஆல்கஹால் சம எடைக் கலந்து சர்க்கரையில் 2 முதல் 5 துளிகள் வரையில் விட்டு 5 முதல் 15 நிமிஷத்துக்கொரு தரம் சாப்பிடவும்.

வைப்பு வைக்கல்:

படிகாரம் 10 பாகம், பேரியம் சல்பேட் 4, ஜலம் 1 ஜலத்தில் படிகாரத்தைக் கரைத்து கொதிக்க வைத்து கொதிக்கும் பொழுது பேரியசல்பேட்டை போட்டு ஜலம் கொதித்தவுடன் கீழே இறக்கி வைத்து ~~குத்தி~~ முத்து ஆகிய வரையில் நன்றாய் கிளறி விட்டுக் கொண்டிருக்கவும். முத்தானவுடன் முன் பாகவே தயார் செய்திருக்கும் அச்சில் ஊற்றவும். நன்றாக சூடாறினவுடன் எடுத்து நிழலில் உலர்த்தி வைக்கவும். பிறகு பாலிஷ் செய்து கொள்ளலாம்.

1. வலிப்புக்கும், பயித்தியத்துக்கும், சிறு பிள்ளைகளுடைய வயிறு இடுக்கிகளுக்கும், உப்பு மாந்தங்களுக்கும் வெகு நல்ல மருந்து கொடுக்கும் அளவு 2 முதல் 12 குன்றி வரையில் ஜலத்தில் கொடுக்கலாம். * பொட்டாஸியம் புரோமைட் *
2. க்ஷய இருமலுக்கும் காசத்திற்கும் * அஞ்சியர்ஸ் எமல்ஷன் *
3. வயிற்று வலி, கிராணி, அஜீரணத்துக்கும் நிமிளை பஸ்பம் * பிஸ்மத் ஸப்நைட்ரஸ் *
4. உருசியில்லாத கொய்னா * யூகுயினன் * பொட்டணம்.
5. ஒரு தலைவலிக்கு சுவாச காசத்துக்கும் 1 முதல் 15 குன்றி வரையில் * காபீன் ஸிட்ராஸ் *
6. நீரடி முத்து எண்ணெயின் இங்கிலீஷ் பெயர் * சால் முக்ரா ஆயில் *

7. மூலமேகம் வெகு மூத்திரம் வகைகளுக்கு *ஆரோ ஆர்ஸனிக்*

8. குடைவலி, எவ்வித கொடைச்சல் வலிகளுக்கும் உதவும். *ஸெங்கு*

9. ஆறுமுகச் செந்தூரம்:- பாலரசம் பலம் 2, கெந்தி பலம் 2, லிங்கம் பலம் வ, வீரம் பலம் வி, ரச செந்தூரம் பலம் வி, தாளகம் பலம் வ. கெந்தியில் பாதி குடுவையுள் புறம் வெற்றிலைச் சாற்றால் பூசவும். மற்றது தூளாக அரைத்து ❧❧❧❧ போட்டு மணலுக்குள் 4 ஜாமம் சமலகாடாக்கினி

காய்ச்சல் கட்டிகளுக்கு.

பெரிரெடிக்டம் 4 டிராம், ஸ்டிரிக்னியா 6 கிரைன், ஆஸிம் ஆர்ஸனிக் 2 கிரேன், எக்ஸ்ட்ராக்ட்டு ஜென்ஷன் வேண்டுமளவு நன்றாய் சேகரித்து 150 குளிகை செய்து கொள்ளவும். காலை மாலை ஆகாரத்தின் மேல் ஒவ்வொரு குளிகையாக நாளைக்கு 2 குளிகை கொடுத்து வரவேண்டியது.

காய்ச்சல் கட்டிக்கு நாட்டு குளிகை.

நெ: கெந்தகம், சுத்தித் சாரம், பொட்டுலுப்பு, வெங்காரம் பொரி, மிளகு, சுடுகு, கடுகு ரோகணி, துளசி சமனிடை குமரிப் பாலால் ஆட்டி கடலை பிரமாணம் குளிகை செய்து காலை மாலை ஒவ்வொன்று கொடுக்கவும்.

இதுவு மது.

1. சாரத்தை முள்ளங்கிச் சாற்றிலும்
2. கெந்தியை பன்னீரிலும் க. புளிப்பிலும்
3. வெங்காரத்தை மஞத்தக்காளிச் சாற்றிலும்
4. ஸல்பர் திரவாகத்தை வெந்நீரிலும்..

சுரங்களுக்கு பிரஸிடின் செந்தூரம் சம்பந்தம் இஞ்சி சுரசம், தேன்.

❧❧❧❧ ஆல்கஉறால்.

காரங்களுக்கு லேகியம், உறஜ்ரெஅர்மினி, லாஜ்வர்த்தக்கல், ஜஉறர் மொகராக்கல் பிஞ்சு கடுக்காய், காப்லி கடுக்காய் தோல், கடுக்காய் தோல் வகைக்கு தோலா 4, குரத்தாவாரை, குலெப்பஸஃபா வகைக்கு தோலா 5 ஊாத்தார் தோலா 6 துளசி வித்து தோலா 3 தேன் 3 எடை குஷ்டத்துக்கு சமத்துக்கும் பாதி நாதம்.

நாற்பட கட்டாயிருக்கிற மாதவிடாயை உடனே தீர்க்க.

ஜலத்தில் 2 முதல் 8 துளி வரையில் கொடுக்க நாளைக்கு இருவேளை 10 தினம் *எக்ஸ்ட்ராக்ட் எர்கட்லிக்விட்* மேற்கண்ட மருந்தை துத்தியிலை வெந்தியம் கஷாயத்தில் கொடுக்க தீரும்.

பித்தத்துக்கு.

சீரகம் வறுத்து பொடித்து சீனி சேர்த்து சாப்பிட வாய் தித்திப்பு பித்தம் குடு நீங்கும்.

புல்லில் சால்ட் குன்றியிடை ஜலத்தில் சாப்பிட 12-ரொ-குன்மம்-வயிற்றுவலி-அடிப்பட்ட ஆயாசம் தூக்கம் வருவதற்கு நல்ல மருந்து.

கொடிய 1-குன்றி-மாக்மிமா-சு-குற்றிவிளாம் பிசின் ஜலத்தில் மிசரயித்து 6 மாத்திரை செய்து காலை, மாலை விழுங்க-பெரு மூத்திரம் தீரும். மண்டலம்

சூதகக்கட்டுக்கும் பிரசுவ காலத்தில் உண்டாகும் உதிரக் கட்டுக்கும் அடியில் கண்ட மருந்து 2 முதல் 5 துளி பருத்தித் தழையும் வெந்தயமும் கஷாயம் செய்து கொடுக்கவும். மருந்து:- ஏப்பியால் லிக்விட், ❧❧❧❧*❧

எஜல்ப்ரூட் சால்ட்டு.

இந்த சால்ட்டை 1 டீஸ்பூன் இளஞ் சுடான வெந்நீரில் கரைத்து 1, 2 அல்லது 3 தடவை கொள்ளவும். மருந்து எடுத்து கொண்டவுடனே காரக் போட்டு விசிக்கவும். ஜீரம் பித்த ஜீரம் தலைவலி, வயற்றை பற்றிய எல்லா நோய்களுக்கும் பித்தத் தலைவலி, காய்ச்சல் கை கால் அசதி நெஞ்சுக் கரிப்பு, மலச்சிக்கல், வயிற்றுக் கழிச்சல், இவைகளுக்கு உபயோகமாகும். அஜீரணம் போகும். பிரயாணிகளுக்கும் ஆகும். 5 வருஷத்திற்குள்பட்ட

குழந்தைகளுக்கு 3 ல் பங்கு டீஸ்பூன் உப்பை ½ டம்பர் இளஞ் சூடான தண்ணீரில் காலை மாலை கொமுக்கவும். பித்த வாநதி கண்டபோது உ மணிக்கு ஒரு தடவை 1 டோஸ் கொள்ளவும். தூக்கமின்மைக்கும் ஒவ்வொரு டோஜாக வாங்கவும். உள்க் காய்ச்சலுக்கும் ஒவ்வொரு டோஜாக வாங்கவும். மேல் காய்ச்சல் இல்லாமலும் காய்ச்சல் வந்தது போல் உள் காய்ச்சலுக்கும் கை கால் அசதியாலும் தினம் 1-க்கு 2 டோஜாக கொடுக்க மாறும் காலரா வரும் காலத்தில் அன்னம் ஜீரணிக்காமலும் நெஞ்சு கரிப்பும், குமட்டல் போலவும் மயக்கமும் தூக்கம் வராவிடிலும் உடம்பு வலியாயிருந்தாலும் மேல்கண்ட படி சாப்பிட்டால் தீரும். காலரா கண்டாலும் சாந்தமாகும். அஸ்த்திஜ்வரம் நிற்காது. (எஸ் வெஜி டபுள் அன் தி பிலியஸ் பிலிஸ்) இதை 2 வயதுக்குள்பட்ட குழந்தைகளுக்கும் இந்த பில்லையை கொடுக்கலாம். இதன் விஷயம் காட்லாக்கில் பார்க்கவும். இதற்கு முன் சொல்லிய மருந்தை தோலைப் பற்றிய கரப்பான், சொரிசிரங்கு, ரத்தக் கட்டிகள், இவைகளுக்கும் மேல் கண்டபடி கொடுக்கவும். சீதோஷ்ண காலம் மத்தியிலுண்டாகும் அல்லது மாறுதல் உண்டாகும் காலத்தில் உண்டாகும் காயல்களுக்கும் ஜலதோஷங்களுக்கும், 5,6 நாள் சாப்பிட தீரும். சிதளத்தினால் சளிப்பிடித்தாலும் தொண்டை கம்மலும் கிறைக் கிருமிகளுக்கும் கொடுக்க நிற்கும். எவ்வித வியாதியும் பிறக்கும் காலமறிந்து மேற்கண்டபடி சாப்பிட்டு வர வரும் வியாதியைத் தடுத்து ரத்த சுத்தியை உண்டாக்கி தேக ஆரோக்கியம் காந்தியும் மனோதிடத்தையும் உண்டாக்கும்.

வாயில் புத்து வருவதற்கு.

பீமரத்துப் பிசின் சித்திரமூலப் பட்டை, தேன் விட்டு அரைத்து புத்தின் பேரில் கடலை பிரமாணம் பூசவும். பத்தியம் நல்லெண்ணை, கடுகு, கரப்பான் பதார்த்தம் கூடாது.

பிரகிருதி ஞானானந்த சமாதி முறிவு.

ஊமத்தம் விரை, தாமரை விரை, எட்டி விரைவு, அதிமதுரம், அபினி, அக்லாகாரம், பச்சைகற்பூரம், புனுகு, மகிழம் விரை, கஞ்சா, வில்வவிரை, வெள்ளருக்கம் பூ, விளான் ஓடு மருதாணி விரை, அருகன் வேர், துளசி, பற்படாகம், அரசம் பட்டை, விஷ்ணு காந்தி, சந்தனம், மஞ்சள், அமிருத சர்க்கரை சாம்பராணி, வகைக்கு ரூபாயிடை 1 தேன் விட்டு மெழுகு பதமாய் அரைத்துக் கொண்டு அரிசியிடை பசும்பாலில் சாப்பிடவும்.

காசத்துக்கு.

லவுங்கம் பலம் ½, சன்ன லவுங்கப்பட்டை பலம் 1, கருப்பு வெற்றிலை காம்பு 200 அபின் வீ.1, கண்டங்கத்திரி விரை ரூபாயிடை 1, அபினி நீக்கி நெய் வருகல் செய்து மேற்கண்ட அபினியும் சேர்த்து பனைவெல்லம் சேர் 1 சேர்த்து இடித்து வைத்துக் கொள்ளவும்.

மற்றொரு தேள் கடி மருந்து.

சுத்தமான ஜலத்தில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு அதில் வெட்டி யெடுக்கும் உப்பைக் கரைக்கக் கூடியளவு கரைத்து வைத்து இடது பக்கம் கடித்திருந்தால் வலது கண்ணிலும் வலது பக்கம் கடித்திருந்தால் இடது கண்ணிலும் சில துளிகள் விடவும்.

பாம்பு கடி மருந்து.

வாழக்க சம் இது பரிக்ஷித்து பார்க்கவும்.

சிமண்டு.

சாக்கு அல்லது சுண்ணாம்புக்கல் 80 பாகம் ஆத்துகளி மணி இரும்பு ஆக்ஸைட் 20 பாகம் நன்றாக ஜலத்தில் கலந்து சூடேரின் தகடுகளின் போட்டு ஈரம் போக்கி விட்டு பிறகு சூளையில் போட்டு சுட்டு பொடி செய்து வைத்துக் கொள்ளவும். காற்றுப் படாமல் கதகதப்பான அரைகளில் சில மாதங்கள் வைத்திருந்து பிறகு உபயோகிக்கலாம்.

இமிடேஷன் தங்க பவுடர்.

ஒரு குகையில் சம எடை கந்தகமும், டின் ஆக்ஸைட் போட்டு உரிக்கு தங்க வர்ணமுள்ள பவுடர் ஆகிற வரையில் கண்ணாடி குச்சியால் கிளரி விட்டுக் கொண்டிருக்கவும்.

தங்க பவுடர்.

தங்க_பவுடர்:- சமன் எடை தேறும், தங்க ரேக் எடுத்துக் கொண்டு நன்கு அரைத்து 30 பங்கு சுடு ஜலத்தில் போட்டு வைக்க அடியில் நிற்கும் வஸ்துவை மறுபடி எடுத்த ஜலத்தில் போட்டு வைத்து இம்மாதிரி 4,5 தடவை செய்து பிறகு பவுடரை உலர்த்தி வைத்துக் கொள்ளவும். உபயோகிக்கும் முன் சுத்தமான கோந்து ஜலத்தில் கொஞ்சம் பவுடரை சேர்த்துக் கொள்ளவும்.

முதல்_தரம்_கருப்பு_இங்கி.

கடுக்காய் பாகம் 30 பாகம் அன்ன பேதி 10 பாகம் இரும்பு சன்னம் 8 பாகம் நீலி 1 பாகம் நல்ல சல்பூரிக் ~~**********~~ ஆஸிட் 6 பாகம் ஜலம் 400 பாகம்:-

முக்காலே மூன்று வீசம் ஜலத்தில் கடுக்காய் தூளை காய்ச்சி வடி கட்டி தனியாக வைத்துக் கொள்ளவும். மற்ற ஜலத்தில் அன்ன பேதியை கரைத்து சீலியை ஆஸிடில் கரைத்து இரண்டும் கலந்து அதில் இரும்பு சன்னத்தைப் போட்டு 2,3 நாள் வைத்திருந்து வடிகட்டி முதல் செய்த கடுக்காய் கஷாயத்துடன் சேர்க்கவும்.

அரிதகி_லேகியம்.

அரிதகி சேர் 3 அதை சிதைத்தும் மண் பாத்திரத்திலிட்டு நாலு படி ஜலம் விட்டு சுண்ட வைத்த கஷாயம் படி பச்சை முயற் கோட்டை 3/4 அதை இடித்து சார் பிழிந்து கொள்ளவும். பனை வெல்லம் சேர் 1½ மேற்கண்ட ரசங்களில் கலந்து வடிகட்டி பாகு செய்யவும்.

கற்கவகை.

மிளகு, சுரகம், அரத்தை வாய்விளங்கம், தாளிசபத்திரி, சோம்பு, லவுங்கப் பட்டை, கருஞ்சீரகம், ஏலம், மல்லி, திப்பிலி, மாசிக்காய், சிறு ~~நாக~~ காஞ்சொறி இதுகள் வகைக்கு பலம் ¼ சூரணித்துபாகில் போட்டு கிளறி தேன் சேர் 1 விட்டு கிளறி லேகியம் காய்ச்சி களச்சிக் காயளவு காலை மாலை இரண்டு வேளை சாப்பிட்டு வர இருமல் ரோகம் தீரும்.

காலராவுக்கு.

வெங்காரம் பொரித்து சேர் 1, ஈய செந்தூரம் பலம் 1 பூரம் பலம் ½, இவைகளை அரைத்துவைத்துக் கொண்டு அரிசியிடை கொடுக்கவும்.

கூச_பாண்ட_லேகியம்.

சாம்பல் பூசணி வறுத்து எடுத்த பூ பலம் 8, கபூர்ள சேர் 1 அக்ரோட் சேர் ¼, பிஸ்தாப்பருப்பு சேர் ¼, சாரப்பருப்பு சேர் ¼, பாதாம் பருப்பு சேர் ¼, குல்கந்து சேர் 1, சீமை அத்தி சேர் ½, சாலாம் பிசிரி பலம் 1, சபேதமுசரி பலம் 1, பாமன் சுருக் பலம் 1, பாமன் சலேர் பலம் 1, தாது சுருக்கு பலம் 1, தாலி சபேது பலம் 1, ஓரிலை தாமரை, நீர்முள்ளி பலம் 1, சர்க்கரை வீசை 1, நெய் இவள்ளீரேக்கும் கொடுக்கலாம்.

பெரு மருந்து தழையை அரைத்து தேங்காயினுள் செலுத்தி அடைத்து புடம் போட்டு ஒரு கருகிய பின் தேங்காயோடு அரைத்து நல்லெண்ணெயில் போட்டு எரித்து தைலமா போட்டு முடக்கு நிவர்த்தியாம்.

குஷ்டத்துக்கு:

நீரடிமுத்து, செகப்பலரி வேர் பட்டை இரண்டையும் குழித் தைலம் இறக்கி பூரம் சேர்த்து பூச ஆறும்.

தாதுவிர்த்திக்கு.

கருப்பு காஞ்சரி விரை பலம் 6, பாதாம் பலம் 3, அதிமதுரம் பலம் 1 லேகியம் செய்து பெரிய குன்றி மணியளவு எடுத்துக் கொள்ளவும். பாகு செய்ய வே வேண்டியதில்லை. கல்வத்திட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும்.

க.ச:9.8.62.

முற்றும்.